

# AHARAM அகரம்

எண்: 11 எழுத்து: 12 டிசம்பர் : 2017 | ர.அவ்வல் : 1439

## மரம் வளர்ப்போம் மனிதம் காப்போம்

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எயிட்ஸ் விழிப்புணர்வு தினம் டிசம்பர் 01



மனிதனது நோய் எதிர்ப்பாற்றலை முற்றுமுழுதாக அழிக்கும் எயிட்ஸ் **AIDS** **(Acquired immune deficiency syndrome)** நோய் பற்றிய விழிப்புணர்வு தினமாக டிசம்பர் 01 இனை ஐ.நா சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் 36.7 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோயுடன் வாழ்வதாகவும் அவர்களில் ஒரு மில்லியன் மக்கள் கடந்த 2016ஆம் ஆண்டு மாத்திரம் இறந்து போயிருப்பதாவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் **(WHO)** அறிக்கைகள் கூறுகின்றன. இலங்கையில் தற்போது 4100 எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற இரத்த பறிமாற்றம். தவறான பாலியல் நடத்தைகள். தொற்று ஏற்பட்டுள்ள தாயிடம் இருந்து மகவுக்கு காவுதல் என பல காரணிகளால் எயிட்ஸ் பரவிக்கொண்டிருக்கின்றது. இந்த உயிர்கொல்லி ஆபத்திலிருந்து அனைத்து மக்களையும் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும்.



# மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10

மனிதனாக பிறந்த மனிதன் மனிதனாக வாழ்ந்து மனிதனாக மறைவதற்கு அவனுக்கு வழங்கப்பட்டுள்ள விஷேட அனுமதிகள் உரிமைகள் என அழைக்கப்படுகின்றன.

இறுதி தூதர் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனா வாசிகளுடன் செய்துகொண்ட மதீனா சாசனத்தில் மனித உரிமைகள் பற்றி முன்மொழியப்பட்டு அதனைத்தொடர்ந்து மக்காவின் அறபா பெருவெளியில் மேற்கொண்ட இறுதி பிரசங்கத்தில் அவை உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டன.

அதைத்தொடர்ந்து காலத்திற்கு காலம் மனித உரிமைகளுக்கான புரட்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- 1688- பிரித்தானிய புரட்சி
- 1789- பிரான்சிய புரட்சி
- 1783- அமெரிக்க புரட்சி
- 1917- ரஷ்ய புரட்சி
- 1949- சீனப்புரட்சி

இறுதியாக 1948ஆம் ஆண்டு டிஸம்பர் 10 ஐக்கிய நாட்டு தாபனம் மனித உரிமைகள் பிரகடனத்தை வெளியிட்டு ஒவ்வொரு நாடும் மனித உரிமைகளை தமது அரசியல் யாப்புக்களில் இணைத்துக்கொள்ள வேண்டும் என வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஒரு நாளைக்கு மனிதன் 3 சிலிண்டர் அளவு ஓட்சிசனை சுவாசிக்கின்றான். ஒரு சிலிண்டரின் விலை 1000 ரூபா. அப்படியாயின், ஒரு நாளைக்கு 3000 ரூபாவை சுவாசிப்பதற்கு மாத்திரம் மனிதன் ஒதுக்க வேண்டும்.**














AHARAM அகரம்

எண்: 11 - டிசம்பர் : 2017 - எழுத்து: 12






ஆசிரியர்
எம். ரிஸ்வி ஸுபைர் M.Ed

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


## பாடத்திட்டம்


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| வரலாறு | 20 |
| அரபு மொழி | 14 |





36


**தொடர்புகளுக்கு:**

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com


**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் Passion என்ன?

ஏதாவது ஒரு தொடர் வேலையின் பின் மிகவும் களைத்து விடுகின்றோம். உடலும் உள்ளமும் சோர்ந்து விடுகின்றன. சலிப்பு தலைக்கு மேல் ஏறி உட்கார்ந்து கொட்டாவி விடத் துவங்கி விடுகின்றது. உடலும் உள்ளமும் ஒன்றாக களைத்துப்போகும் நொடியில் நம் முன்னால் இரண்டு தெரிவுகள் இருக்கின்றன. ஒன்று, அனைத்து வேலைகளையும் மூட்டைகட்டி பரணில் போட்டு விட்டு நன்றாக ஓய்வெடுப்பது. அல்லது எமக்கு புத்துணர்ச்சியூட்டும் ஒரு விடயத்தைச் செய்து பார்ப்பது.

புத்துணச்சியூட்டும் மாற்று வேலைக்குத்தான் ஓய்வு என்ற பெயர். தேங்கி கிடந்து சாக்கடையாக நாற்றமெடுக்கும் நீரைப்போல ஓய்வு என்ற பெயரில் நாம் தேங்கினால் எமது வளர்ச்சி தடைப்படும். சிங்கம் கூட அலையாமல் நான்கு நாள் ஓரிடத்தில் படுத்துக் கிடந்தால் அதன் மேல் சிலந்திகள் வலை பிண்ணி கறையான்கள் புற்றும் கட்டியெழுப்பி விடும். ஓய்வு என்ற பெயரில் நாம் சோர்ந்து கிடந்தால் எமது உள்ளத்துக்கும் அதோ கதிதான் ஏற்பட்டு விடும்.

Passion என்றொரு வார்த்தையை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். பேரார்வம் என்ற வார்த்தையால் இந்த ஆங்கில சொல்லை மொழிபெயர்த்தாலும் நினைத்தவுடன் எமது குருதிக்குள் மின்சாரமாய் பாய்ந்து, சோம்பலை எரித்து சாம்பலாக்கி, புத்துயிர் தரும் விடயத்தையே நாம் Passion என அடையாளப்படுத்துகின்றோம். Photography என்ற சொல்லை google இல் தட்டிப் பார்த்திருக்கின்றீர்களா? இறைவன் படைத்த இந்த அற்புத உலகு அவர்களின் கெமராக்களின் வழியாக எத்தனை அழகாக காட்டப் படுகின்றது என அவதானித்திருக்கின்றீர்களா? நாம் அன்றாடம் வெகு சர்வ சாதாரணமாக கடந்து செல்லும் சில அற்பமான விடயங்களை அவர்கள் எவ்வளவு விதம் விதமாக காட்சிப்படுத்துகின்றார்கள்.

இவை ஒரு சில Passionகளுக்கு உதாரணம். அது சரி, உங்கள் Passion என்ன என்று எப்போதாவது சிந்தித்து பார்த்திருக்கின்றீர்களா? உங்களை திரும்பிப் பார்க்க வைக்கும் ஒரு விடயம், ஒரு கணம் உங்களை ஸ்தம்பிக்க வைக்கும் விவகாரம் இயந்திரமாகி விட்ட இந்த உலக வாழ்வில் நீங்கள் தொலைத்த உங்கள் அற்புத ஆற்றல். உங்களை அதீத ஆற்றலுடன் போராட வைக்கும் ஒற்றைச் சொல் அதுதான் நாம் குறிப்பிடும் Passion.

இந்த விடுமுறையில் உங்கள் Passion பற்றி சிந்தித்துப் பாருங்கள். அது உங்கள் வளர்ச்சிக்கு காரணமாக அமையக் கூடியதாக இருந்தால் அதனை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முனையுங்கள். உங்கள் Passion பற்றி அதிகம் கற்றுக் கொள்ளுங்கள். உங்களை சுறுசுறுப்பாக்கும் விடயமாக அதை கைக்கொள்ளுங்கள்.

- எழுத்தாற்றல், ஓவியம், புகைப்படக் கலை, அலங்காரக் கலை
- வீட்டுத்தோட்டம், சிறு வியாபாரம், கண்டுபிடிப்புத் துறை

உங்களை சதாவும் உயிரூட்டக்கூடிய விடயமொன்று உங்களுக்குள் மறைந் திருக்கின்றது. அதனைக் கண்டுபிடித்து உங்கள் சிறகாக மாற்றிக் கொள்ளுங்கள். கல்வி வாழ்வும் அது தொடர்பான சாதனைகளும் அடைவுகளும் ஒரு பக்கம் இருக்க மறுபக்கம், உங்கள் உதிரத்திற்குள் மின்சார தீபமாய் கொழுந்துவிட்டெரியும் Passion வாழ்நாள் முழுக்க உங்கள் அடையாளமாக இருக்கட்டும். வாழ்வை கொண்டாடுங்கள்! அது சரி, உங்கள் Passion என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அன்னை ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''கடைவாய்ப் பற்கள் தெரியும் அளவுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சிரித்ததை நான் பார்த்ததில்லை. அவர்கள் புன் சிரிப்பே சிரிப்பார்கள்.'' (ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹு முஸ்லிம்)

# நபிகளாரின் புன்னகைச் சிரிப்பு

அல்லாஹுத்தஆலா மனிதனுக்கென்றே வழங்கியிருக்கின்ற மகத்தான அருட்கொடைகளுள் ஒன்றே சிரிப்பாகும். இதனை கால்நடைகளோ, பறவைகளோ அல்லது வேறெந்த உயிரினங்களோ அனுபவிப்பதில்லை.

''நிச்சயமாக அவனே சிரிக்க வைக்கிறான், அழவும் வைக்கிறான்.'' (53:43)

மனிதன் தனது உள்ளத்தில் ஏற்படுகின்ற மகிழ்ச்சியை தனது சிரிப்பின் மூலம் வெளிக்காட்டுகின்றான். அவ்வாறே, அவனுக்கு ஏதேனும் துக்கமான விடயம் நடந்து விட்டால் அவன் அதனை தனது சிரிப்பின் மூலம் மறக்க முற்படுகின்றான்.

சிரிக்கத் தெரியாதவன் பிறர் மனதை மகிழ்விக்கத் தெரியாதவன். அவ்வாறே, ஒருவரது சிரிப்பைக் கொண்டு அவரது மனோநிலையை இலகுவாக அறிந்தும் விடலாம். எனினும், சிலர் வாழ்நாளை அர்த்தமில்லாத சிரிப்பால் அசிங்கப்படுத்தி விடுகின்றனர்.

இஸ்லாம் சிரிப்புக்கு எதிரான மார்க்கமல்ல. அது மற்ற சகோதரனின் முகத்தைப் பார்த்து புன் முறுவலாக சிரிப்பது தர்மம் என வழிகாட்டுகிறது. எனினும், சிரிப்பு எனும் அருளை கண்ணியமாக பண்பட்ட முறையில் மனிதன் அனுபவிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

நபியவர்கள் சிரிப்பவர்களாகவும், தமது தோழர்களையும் மனைவியரையும் சிரிக்க வைப்பவர்களாகவும் இருந்துள்ளார்கள். அவர்கள் தமது சிரிப்பை எவ்வாறு அமைத்திருந்தார்கள் என்பதை நபியவர்களின் மனைவியருள் ஒருவரான அன்னை ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் சொற்சுருக்கமாக மேலுள்ள ஹதீஸில் சித்தரித்துள்ளார்கள்.

நபியவர்கள் தமது கடைவாய்ப்பற்கள் வெளிப்படாமல் அதாவது, புன்சிரிப்பாகவே எப்போதும் சிரிப்பார்கள். புன்சிரிப்புத்தான் சிரிப்புக்களிலே மிகவும் உயர்ந்த, பண்பாடான சிரிப்பாகக் காணப்படுகின்றது.

புன்சிரிப்புடன் ஒருவர் ஒரு செய்தியை மற்றவருக்குச் சொல்லும்போது அது மனதில் இலகுவாக பதியவும், கேட்கும் ஆர்வத்தை அதிகரிக்கவும் செய்கின்றது. மேலும், புன்னகை இரண்டு உள்ளங்களுக்கு மத்தியில் பிணைப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

நபியவர்களின் சிரிப்பைப் பற்றி ஜரீர் இப்னு அப்துல்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறும்போது, ''நான் இஸ்லாத்தை ஏற்றது முதல் புன்னகையைத் தவிர வேறெதனையும் நபியவர்களிடத்தில் கண்டதில்லை. அவர்கள் என்னைப் பார்க்கும் போதெல்லாம் புன்னகை பூப்பவர்களாக இருந்தார்கள்.'' (புகாரி)

இன்றைய மனிதர்களிடத்தில் புன்சிரிப்பு மட்டுமல்லாது அசட்டுச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, நையாண்டிச் சிரிப்பு என பல வகையான சிரிப்புக்கள் காணப்படுகின்றன.

புன்சிரிப்பைத் தவிர மற்றவை அனைத்தும் பிறர் மனதை புண்படுத்துகின்ற மோசமான சிரிப்பு முறைகளாகும். சிலர் தாம் இருக்கும் இடத்தை, நிலையை மறந்து இத்தகைய சிரிப்புக்களை சிரித்து விடுகிறார்கள். அது மற்றவர்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்குவதுடன், சிரிப்போர் பிறர் மனதில் நாகரிகமற்றவர்கள் என்ற சிந்தனையைத் தோற்றுவித்தும் விடுகின்றனர்.

பெற்றோர், முதியோர், ஆசிரியர்கள், வழிகாட்டுபவர்களை நையாண்டி அல்லது ஏளனச் சிரிப்பின் மூலம் அவமானப்படுத்துகின்ற ஒரு காலாசாரமும் எம் சமூகத்தில் காணப்படுகின்றது. இது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

மேலும், சிலர் தாம் நகைச்சுவையாளர் எனப் பெயர் எடுக்கும் நோக்கில் எப்போதும் நகைச்சுவை பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் இருக்கின்றனர். இதுவும் மார்க்கத்தில் தடுக்கப்பட்ட விடயமாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''அதிகமாக சிரிக்காதீர்கள். ஏனெனில், அதிகமாக சிரிப்பது உள்ளத்தை மரணிக்கச் செய்துவிடும்.'' (இப்னு மாஜா)

எனவே, எமது சிரிப்பை முறையாக அமைத்து ஈருலகிலும் ஈடேற்றம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் - 08

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

## ஸாலிஹ் நபியின் ஒட்டகம் - 5



இந்த சமயத்தில் அங்கு மதுபான வகைகள் பரிமாறப் பட்டன. போதை தலைக்கு ஏறியபோது அவர்களுக்கு இறைவனின் தண்டனை குறித்த அச்சம் அறவே இல்லாது போய்விட்டது! கோத்திரத் தலைவன் உரத்த குரலில் சொன்னான்: ''ஒட்டகத்தைக் கொன்று விடுவது ஒன்றே இதற்குப் பரிகாரம் என்று''

''எங்களுடைய சட்டங்களுக்கு அப்பால் பீதியே இந்த ஒட்டகம் உயிர் வாழ்வதற்குக் காரணம். எங்களது கோத்திரத்தின் மதப் புரோகிதர்களினதும் சீமான்களினதும் எதிர்பார்ப்புக்கள் அபிலாஷைகள் எல்லாம் இந்த ஒட்டகத்தின் வருகையால் கேள்விக்குறியாகி விட்டன! இதன் காரணமாக ஒட்டுமொத்த சமூகமும் குழப்பத்தில் இருக்கின்றது. அவர்கள் பீதியடைந்திருக்கிறார்கள்.''

சபையினர் இக்கருத்தில் ஒன்றுபடலானார்கள். மதுபானமும் தாராளமாகப் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் தலை போதையால் சுழன்றது போலவே அவர்களது புத்தியும் சுழன்றது.

இந்த சம்பவம் நடைபெற்று சில மணிநேரங்கள் சென்ற நிலையில், அவர்களது சம்மேளனம் தொடர்ந்து கொண்டிருந்தது. இந்தக் குற்றப் பாதகத்தை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குறித்து அவர்கள் வாதிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆரம்பத்தில் ஒட்டகத்தை என்ன செய்ய வேண்டும் என்று தொடங்கிய வினா, இப்போது எவ்வாறு கொலை செய்ய வேண்டும் என்று மாறிவிட்டது. அதன் பிறகு யார் இக்கொலையைச் செய்யப் பொறுப்பெடுப்பது என்று மாறியது.

மனித தீங்குகளின் உள்ளேயிருந்து தந்திரோபாயங்கள் ஊற்றெடுத்து வருவதை ஒட்டகமாகிய நான் விளங்கிக் கொண்டேன். அவர்களுடைய வார்த்தைகள் எனக்கு கேட்கவில்லை. கேட்டாலும் அவர்களுடைய பாஷை எனக்குப் புரியாது. ஆயினும், அவர்கள் எதற்குத் தயாராகின்றார்கள் என்பது மட்டும் தெட்டத் தெளிவாக எனக்கு விளங்குகின்றது.

அவர்கள் என்னைக் கொலை செய்ய முற்படுவது அநியாயமும் அக்கிரமும் என்பதை நான் நன்றாக உணர்ந்திருந்தேன். ஆயினும், எனக்கு புரியாதது என்ன காரணத்துக்காக என்னைக் கொலை செய்ய முற்படுகின்றார்கள் என்பதுதான்.

என்னைக் கொலை செய்யும் அளவிற்கு நான் என்ன குற்றத்தை அவர்களுக்குச் செய்தேன்? இது எனக்கு விளங்கவில்லை.

அவர்களுக்கு எனது பாலையும் அன்பையும் வழங்கிய வண்ணம் தலை குனிந்து அந்தத் தெருக்களில் நடந்து கொண்டிருந்தேன். இச்சமயம் என்னைக் கொன்று விட அவர்கள் தீர்மானித்திருந்ததும் அதை நடைமுறைப்படுத்துவது ஒன்றே பாக்கி என்பதும் எனக்குத் தெரியும்.

அன்றிரவு எனது கன்று என் மார்பில் சாய்ந்து ஆதரவு தேடிய நிலையில் எனக்கு நடக்கப் போகும் கொடுமையை எண்ணி சற்று துக்கம் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் ஏன் எந்தக் குற்றமும் செய்யாத என்னைக் கொலை செய்ய முற்படுகிறார்கள்? விளங்காத புதிராக இது இருந்தது. அது தொடரவும் செய்தது. நானும் பால் வழங்கும் எனது சேவை யைத் தொடர்ந்து கொண்டிருந்தேன்.

இரண்டு இரவுகள் கடந்து மூன்றாம் இரவும் வந்தது.

இது சமூத் கோத்திரத்தினரிடம் எனது கடைசி இரவு என்பதை நான் அறிந்திருந்தேன்.

எனது முடிவைக் குறித்த தெளிவான ஞானம் என்னை சற்று விசனம் அடைய வைத்தது!

பட்டணத்தில் ஒன்பது வம்பர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். கோத்திரத் தலைவன் ஒன்பது பேரையும் கூட்டி அவர்கள் எப்படி என்னைக் கொலை செய்யவேண்டும் என்று அறிவுறுத்தினான். அதில் மிகவும் குரூரனும் தடியனுமாயிருந்த ஒருவனுக்கு என்னைக் கொலை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அந்த ஒன்பது பேரினதும் பெயர்கள் எனக்குத் தெரியாது. ஆயினும், அவர்களும் அவர்களது பிள்ளைகளும் எனது பாலை அருந்தியிருப்பதை மட்டும் நான் நன்கு அறிவேன்.

எவர் அருந்த வந்தாலும் நான் முகம்சுளித்தது கிடையாது. மாறாக, தாராள வாஞ்சையுடன் எந்த ஏற்றத் தாழ்வுமின்றி அனைவருக்கும் பால் வழங்கிய அமுத சுரப்பியாக நான் இருந்தேன். எவரிடத்தும் கூலி கேட்கவில்லை.

''பட்டணத்தில் ஒரு நன்மையும் செய்யாத அநியாயக்காரர்கள் ஒன்பது பேர் இருந்தார்கள்'' என்று அல்லாஹ்வும் இவர்களை அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான். அவர்களது பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

அவர்கள் பயங்கரவாதத்தின் கருவிகளாக இருந்தார்கள். அந்தக் கொலை பாதகத்தைச் செய்த வனை ''அவர்களுடைய தோழன்'' என்றே குறிப் பிடப்படுகின்றது.

''அவர்களுக்கு சோதனையாக நாம் ஓர் ஒட்டகத்தை அனுப்பினோம். அதன் மூலம் நீர் அவர்களைக் கண்காணிப்பதுடன் பொறுமை யாகவும் இருப்பீராக. தண்ணீரை ஒட்டகத்திற்கும் மக்களுக்கும் இடையே தவணைமுறையில் விநியோகிப்பீராக. அவர்கள் தமது தோழனை அழைத்தார்கள். அவன் ஒட்டகத்தைக் கொன்று விட்டான். அதன் பிறகு அவர்கள் மீது எனது தண்டனை எவ்வாறிருந்தது என்பதை நபியே நீர் கவனிப்பீராக''

''தோழன்'' என்று அழைக்கப்பட்டவன் நான் உறங்கிக் கொண்டிருந்த இடத்திற்குள் பிரவே சித்தான். அவன் மதுபோதையில் ஆடிக்கொண்டி ருந்தான். வாள் அவனது கையில் மின்னிக் கொண் டிருந்தது! காரிருளை விடவும் அவனது உள்ளம் இருண்டு போயிருந்தது. அவன் எனக்கு அருகில் வர முன்பே ஒரு மலக்கு என்னிடம் வந்துவிட்டார். என்னிடம் வந்த வானவரின் கனிவைக் கண்டவுடன் எனது இறுதி நெருங்கிவிட்டதை நான் உணர்ந்து கொண்டேன். அது மட்டுமின்றி, பல்வேறு காரியங்களின் யதார்த்தமும் எனக்கு புலனாகியது. கர்வமும் அகங்காரமும் பிடித்த ஒரு சமூகத்திற்கு நான் ஒரு சோதனையாக அனுப்பப்பட்டவன் என்பது எனக்கு நன்கு புரிந்தது. எனது வகிபங்கு அதுவே.

அக்கொலையாளி பிரவேசித்தபோது நான் எழுந்து நின்றேன். அவன் என்னை நேராகப் பார்த்தான் ஒரு முறை. மதுபோதையில் மயங்கிய அவனது கண்களை சரியாகப் பார்க்க என்னால் முடியவில்லை. அவன் வாளை ஓங்கினான். எனது குட்டியைப் பாதுகாக்க நான் ஓலமிட்டேன். அவன் எனது கால்களை வெட்டி வீழ்த்தினான்.

இறைவனை சுஜூது செய்து கொண்டு நான் நிலத்தில் வீழ்ந்தேன். எனது கால்கள் வெட்டப் பட்ட இடத்தில் இருந்து இரத்தம் ஓட ஆரம்பித்தது! இரத்தத்தைக் கண்ட கொலையாளி வாளை ஓங்கி எனது கழுத்தில் பதித்தான்!

எனக்கு அப்போது எப்படி இருந்தது? ஷஹாதா என்னும் இரத்த சாட்சி. அமைதியும் இன்னதென்று விபரிக்க முடியாத சாந்தியும். எனது குட்டியோடு சேர்ந்து கற்பாறையின் பகுதியாக மீண்டும் மாறி னேன்.

எனது இரத்தம் பூமியில் சிந்தியதுடன் அந்தப் பிரதேசத்தை மூன்று நாட்கள் தண்டனை சூழ்ந்தது! அல்குர்ஆன் இந்தத் தண்டனையை இப்படி விபரிக்கின்றது:

நாம் அவர்களை நோக்கி ஒரே ஒரு சப்தத்தையே அனுப்பினோம். அவர்கள் சூடடித்த வைக்கோல் பதர்களைப் போல மரணித்து வீழ்ந்து கிடந்தனர்!...

(இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் யூஸுஃப் நபியின் ஓநாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com



# மரம் வளர்ப்போம் மனிதம் காப்போம்

பூமியின் பிரதான இயற்கை வளங்கள் நான்கு. நீர், காற்று, மண், மரம் என்பனவே அவை. மற்ற கோள்கள் காய்ந்து வரண்ட நிலையில் காட்சியளிக்க, பூமி மட்டும் குளிர்ச்சியாக நீல நிறத்திலும் பசுமையாகப் பச்சை நிறத்திலும் காட்சியளிப்பதற்கு மிகப் பிரதானமான காரணம் இவ் இயற்கை வளங்கள்தான். இவற்றில் மரங்கள் முக்கியமானவை. இவை உயிரின வாழ்கைக்கு பெரிதும் பங்காற்றி வருகின்றன. மனிதனின் முதல் நண்பன் மரம். அம்மரங்கள் பற்றி இத்தொடரில் அலசுவோம்.

**மரம் இன்றி வாழ்வில்லை**

ஒரு நாளைக்கு மனிதன் 3 சிலிண்டர் அளவு ஒட்சிசனை சுவாசிக்கின்றான். ஒரு சிலிண்டரின் விலை 1000 ரூபா. அப்படியாயின், ஒரு நாளைக்கு 3000 ரூபாவை சுவாசிப்பதற்கு மாத்திரம் மனிதன் ஒதுக்க வேண்டும். ஒரு வருடத்திற்கு 1,095,000 ரூபாய்கள் சுவாசிப்பதற்காக செலவு செய்தாக வேண்டும். சாதாரணமாக நாம் 60 வருடங்கள் வாழ்வோமென்றால் வாழ்நாளில் மொத்தமாக 65,700,000 ரூபாக்களை ஒட்சிசன் சிலிண்டர்களுக்காக மட்டும் செலவு செய்ய வேண்டும், சுப்ஹானல்லாஹ்.

இத்தகைய எந்த செலவினமும் இன்றி மரங்கள் நமக்கு இலவசமாக ஒட்சிசனைத் தருகின்றன. ஒரு மரம் ஒரு நாளைக்கு நான்கு பேருக்குத் தேவையான ஒட்சிசனை வெளியிடுகின்றது. அப்படியென்றால், மரம் செய்யும் இலவச சேவையின் வெகுமதி புரிகிறதா? பூமியில் மனிதன் இன்றி மரங்களால் வாழ முடியும். ஆனால், மரங்கள் இன்றி மனிதனால் வாழ முடியாது. காரணம் நாம் வெளியிடும் காபனீரொட்சைட்டை உள்ளீர்த்து சுத்தம் செய்து ஒட்சிசனாக அவற்றை மாற்றி வெளியிட்டு எமது சுவாசத்துக்குப் பங்காற்றுவது இம்மரங்கள்தான். இது ஓர் அற்புதமான பரிமாற்றச் செயற்பாடுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகில் மரங்கள்**

இப்பூமிப் பந்தில் முதன் முதலில் உருவாகிய உயிர் மரம் என விஞ்ஞானம் கூறுகின்றது. தாவரங்களின் உருவாக்கத்தின் பின்புதான் விலங்கினங்கள், பறவையினங்களை எல்லாம் அல்லாஹ் இப் பூமியில் சிருஷ்டித்தான். ஏனெனில், உயிர் வாழ்வதற்கு மரங்களின் தேவை மிக அவசியமாகும். ஆதம், ஹவ்வா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் படைப்பதற்கு முன்பே மரங்கள் இருந்துள்ளனவே. அதனால்தானே அவ் இருவரையும் குறிப்பிட்ட மரத்தை நெருங்க வேண்டாம் என்றும் கனியைப் புஷிக்க வேண்டாமென்றும் அல்லாஹ் கட்டளையிட்டிருந்தான்.

மரம், செடி, கொடி, புற்கள், பூண்டுகள், பாசிகள் அனைத்தும் தாவரம் எனும் பெரும் உயிரினப் பிரிவாகும். உலகில் 350,000 இற்கும் அதிகமான தாவர வகைகள் இருப்பதாக தாவரவியற்துறை விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர். இவற்றுள் 287,655 இனங்கள் வரை அடையாளம் காணப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்ட தாவரங்களுள் ஏறத்தாழ 258,650 பூக்கும் தாவர வகைகள். 29% ஆன நிலப்பரப்பு 7% காடுகளால் சூழப்பட்டுள்ளது. குளிர்ப் பிரதேசங்கள், பாலைவன நிலங்கள், நீர் பகுதிகள் என எல்லா இடங்களிலும் அச் சூழலுக்கு இசைவடைந்த தாவரங்கள் உயிர் வாழ்கின்றன.

**உயிருள்ள மரங்கள்**

**Everything that can grow is has life** - ''வளரக் கூடிய ஒவ்வொன்றுக்கும் உயிர் உண்டு'' என விஞ்ஞானம் கூறுகின்றது. மரம் வளர்கின்றது, தனது சந்ததியைப் பெருக்குகின்றது. எனவே, அவற்றுக்கு உயிர் உள்ளது என உறுதியாகக் கூறலாம். தாவரங்களுக்கு உயிர் இருப்பதால்தான் அது ஒட்சிசன், சூரிய ஒளி, நீர், பச்சையம், கனியுப்புக்கள் என்பவற்றைப் பயன்படுத்தி தமக்காக உணவு தயாரித்துக் கொள்கின்றது (**Photo Synthesis**). அதேபோன்று, சில பூச்சியுண்ணித் தாவரங்கள் புழு, பூச்சிகளை வேட்டையாடி உண்டு வாழ்கின்றன. இவை தாவரங்களுக்கு உயிர் உள்ளது என்பதைக் காட்டுகின்றது. பிற உயிர் ஜீவிகளைப் போன்று தாவரங்களுக்கும் கலங்கள், கலச் சுவர்கள், கலத்தின் கரு, அதற்குள் நிறமூர்த்தங்கள், **DNA** க்கள், காபன் அணுக்கள், இலத்திரன், புரோத்திரன் அணுக்கள் என பல சமாச்சாரங்கள் இருக்கின்றன. இவை அனைத்தும் உட்பொதிந்துள்ள ஓர் இலையைக்கூட அல்லாஹ் வீணாகப் படைக்கவில்லை.

**உணர்வுள்ள மரங்கள்**

மலிக் ஸுஊத் அரச பல்கலைக்கழகத்தின் தாவரவியற் துறைப் பேராசிரியர். Dr. பைஸல் மரத்திற்கும் உணர்வுண்டு என்பதை நிரூபித்துள்ளார். அவர் கூறுகையில், தாவரங்கள் தம்மைக் கையாளுபவருடைய தன்மைகளைப் பற்றிய தகவல்களைத் தமது இரசாயன நரம்புத் தொகுதியில் தொகுத்து வைத்துக் கொள்கின்றன. ஒருவர் ஒரு தாவரத்தோடு நல்லவிதத்தில் நடந்து கொண்டால் அவர் நெருங்கும்போது அத்தாவரம் அமைதியாக இருக்கும் என்றும் அதனுடன் கடுமையாக நடந்து கொண்டால் அது நடுங்கியவாறு ஒரு வகை இரசாயனத்தை வெளியிடுவதாகவும் கண்டறிந்தார், சுப்ஹானல்லாஹ்! மரங்களுக்கும் உயிர், உணர்வுகள் இருப்பதால்தான் அவையும் அல்லாஹ்வை சிரம் பணிவதாக அல்லாஹ் திருமறையில் குறிப்பிடுகின்றான். செடி, கொடிகளும் மரங்களும் அல்லாஹ்வுக்கு சிரம் பணிகின்றன. (55:6)

**சுவனத்திலும் மரங்கள்**

சுவனம் 'ஜன்னா' என அரபு மொழியில் அழைக்கப்படுகின்றது. ஜன்னதுன் என்றாலே தோப்பு, தோட்டம் என்ற பொருளைத்தான் தருகின்றது. அப்படியென்றால் சுவனத்திலும் மரங்கள் இருக்குமா? நிச்சயமாக இருக்கின்றது. அல்குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் சுவனத்தைப் பற்றி வர்ணிக்கும் போதெல்லாம் கட்டாயம் மரங்களும் சோலைகளும் குறிப்பிடப்படுகின்றன. பாருங்கள், தன் இறைவனின் முன் (விசாரணைக்காக மறுமையில்) நிற்க வேண்டுமென்பதைப் பயந்தவனுக்கு சுவனத்தில் இரண்டு தோட்டங்கள் இருக்கின்றன. (55:46) அவ்விரண்டு (சுவர்க்கச் சோலைகளு)ம் (பலவிதமான மரக்)கிளைகளையுடையவை. (55:48) மேலும், அவ்விரண்டு (சோலைகளு)ம் அல்லாமல், வேறு இரு சுவனச் சோலைகளும் இருக்கின்றன.(55:62) அவ்விரண்டும் கடும் பச்சையான நிறமுடையவை. (55:66) இன்னும் பேரீத்த மரம், திரட்சைக் கொடி, அத்தி, மாதுளை, ஒலிவ் என பல்வகை கனிகள் தரும் மரங்களும் சுவனத்தில் இருக்கின்றன.

**மரங்களின் பயன்கள்**

கவிஞர் வைரமுத்துவின் மரம் பற்றிய அழகானதொரு கவிதையில் மரங்களின் பயன்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து அழகுற எழுதியிருக்கின்றார். அதில் சில பகுதிகளையே இங்கு தருகின்றேன். உண்ணக்கனி - ஒதுங்க நிழல் - உடலுக்கு மருந்து - உணர்வுக்கு விருந்து - அடையக்குடில் - அடைக்கக் கதவு - அழகு வேலி - ஆடத்தூளி (தொட்டில்) - தடவத் தைலம் - தாளிக்க எண்ணெய் - எழுதக் காகிதம் - எரிக்க விறகு - பிறந்தோம் - தொட்டில் மரத்தின் உபயம், எழுதினோம் - பென்சில், பலகை மரத்தின் உபயம், மணந்தோம் - மாலை சந்தனம் மரத்தின் உபயம், துயின்றோம் - தலையணைப் பஞ்சு மரத்தின் உபயம், நடந்தோம் - பாதுகை ரப்பர் மரத்தின் உபயம், இறந்தோம் - சவப்பெட்டி பாடை மரத்தின் உபயம், எரிந்தோம் - சுடலை விறகு மரத்தின் உபயம். இவ்வாறு பிறப்பு முதல் இறப்பு வரை எமது அனைத்து வாழ்க்கை வட்டங்களிலும் மரங்கள் சங்கமிக்கின்றன.

**அழிவுக்குள்ளாகும் மரங்கள்**

1852 ஆம் ஆண்டு முதல் உலகில் காடழிப்பு மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. உலகின் பாதிக்கும் மேற்பட்ட மலைக் காடுகள் 1990 இலிருந்து அழிந்து கொண்டு வருகின்றன. 1990 முதல் 2015 வரை உலகில் 120 மில்லியன் ஹெக்டேயர் காடுகள் அழிந்துள்ளன. இது தென் ஆபிரிக்காவின் நில அளவுக்கு சமனானது. ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) 2005 ஆம் ஆண்டின் அறிக்கையில், பூமியின் மொத்தக் காட்டுப் பகுதி தொடர்ந்தும் ஆண்டுக்கு 13 மில்லியன் ஹெக்டெயர்கள் குறைவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. காடழிப்பினால் ஓர் ஆண்டுக்கு 137 தாவர வகைகளும் 50,000 விலங்கு, பூச்சி இனங்களும் அழிந்து வருகின்றன. ஒரு தொன் கடதாசி தயாரிக்க 17 மரங்கள் வெட்டப்படுகின்றன.

எமது அண்டை நாடான இந்தியாவில் 33% இருந்த காடுகள் குறைந்து தற்போது 22% காடுகள் மட்டுமே உள்ளன. மீண்டும் 33% காடுகளை உருவாக்க 54 கோடி மரங்களை நடவேண்டுமாம். 1880 களில் இலங்கை 80% காடுகளால் மூடப்பட்டிருந்தது. இது 1920 இல் 49% ஆகக் குறைந்து மீண்டும் 2015 ஆம் ஆண்டாகும்போது 29% ஆக குறைந்துள்ளது. 1990 இற்கும் 2000 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஒரு வருடத்திற்கு சராசரியாக 26800 ஹெக்டெயர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இன்று மனிதன் காடுகளை அழித்து கொங்கிரீட் காடுகளை வளர்த்து வருகின்றான்.




கட்டிடங்களைக் கட்டி கண்களால் அழகு பார்க்கும் மனிதன், கண்களைக் கட்டிக் கொண்டு மரங்களை அழித்து வருகின்றான்.

**மரங்களை நடுவோம், காப்போம்**

இன்று உலகம் முழுதும் மரங்களைக் காப்பதற்கும் நட்டு வளர்ப்பதற்கும் பல்வேறு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவின் அஸாம் மாநிலத்தின் வரண்டு போன ஒரு பகுதியில் கடந்த 35 ஆண்டுகளாக கஷ்டப்பட்டு 1,360 ஏக்கர் பரப்பளவில் ஒரு காட்டை உருவாக்கிய தனிமனிதனைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளீர்களா? ஆம், அவர்தான் ஜாதவ் பயேங். ஒரு சாதாரண விவசாயி. அதே இந்தியாவில் தமிழ்நாட்டில் காய்ந்துபோன தர்மபுரி மாவட்டத்தில் தனி மனிதனாக நின்று 200 ஏக்கர்களுக்கு ஒரு வனாந்தரத்தை உருவாக்கிய இன்னுமொருவர்தான் 'பியுஷ் மனுஷ்' இவர் ஒரு சமூக ஆர்வலர். இவர்கள் தனிமனிதர்களாக நின்று காடுகளையே உருவாக்கியிருக்கின்றார்கள் என்றால் எம்மால் ஒரு மரம் கூட நட்ட முடியாதா?

**மரம் நடுவது ஓர் இபாதத்**

இஸ்லாம் மரங்களை நட்டு வளர்ப்பதை ஓர் இபாதத்தாகப் பார்க்கின்றது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள், அடுத்த கணம் மறுமை வருவதாக இருந்தாலும் உங்கள் ஒருவரின் கையில் ஒரு மர விதை இருந்தால் அதை நாட்ட முடியுமான சந்தர்ப்பமாக இருந்தால் அதை நாட்டி விடுங்கள் (புஹாரி, அஹ்மத்) இன்னுமொரு முறை, ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை நட்டு அதிலிருந்து ஒரு மனிதனோ அல்லது ஓர் உயிரினமோ உண்டால் அதனால் அவருக்கு ஒரு தர்மம் செய்ததற்கான நன்மை கிடைத்து விடும். (முஸ்லிம்) நாம் மரணித்தாலும் மரம் உயிர் வாழும் வரை நமது மண்ணறைக்கு ஸதகதுல் ஜாரியாவுடைய நன்மைகள் வந்து சேர்ந்து கொண்டே இருக்கும் இன்ஷா அல்லாஹ்! மரம் மண்ணின் வரம், வளர்ப்பதே மனித அறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்**



ஒட்டுமொத்த அரபு சாம்ராஜ்யத்தின் தலைவர் அவர்தான். அரபு சாம்ராஜ்யம் மட்டுமல்ல, அருகில் இருந்த பாரசீக பேரரசும் மறுபக்கம் உரோம சாம்ராஜ்யமும் அவரிடம் படிப்படியாக வீழ்ந்து கொண்டிருந்தன. வீரத்திற்கும் நீதிக்கும் ஒருமைச் சொல்லாக அவரது பெயரை வரலாறு தன் குறிப்பேடுகளில் பெருமிதமாக பதிந்து கொண்டிருந்த தருணம் அது. அவரின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில், அநீதிகளின் அடித்தளங்கள் ஆட்டங்கண்டு கொண்டிருந்தன.

# உலகை ஆளும் நீதி

**எம்.ஏ. ரஹ்மான்**

ஒரு நாள் தன் தலைநகர், மதீனா மக்களை அழைத்து உரையாற்றிக் கொண்டிருக்கும்போது தன் மக்களைப் பார்த்துக் கேட்கிறார்,

''இந்த உமர் தவறு செய்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்'' என்று

அத்தனை நேரமாய் நிலவிக் கொண்டிருந்த அமைதியை கிழித்துக் கொண்டு கம்பீரமாக எழுந்த ஒருவர் தன் உடைவாளை உருவி தலைக்குமேல் உயர்த்தி, ''நீர் அவ்வாறு தவறு செய்தால், இந்த வாளால் உம்மை திருத்துவோம்'' என்கிறார்.

ஒரு மாபெரும் சாம்ராஜ்ய தலைவருக்கு முன்னால் ஒரு சாமான்யன் எழுந்து கர்ஜித்துவிட்டு அமர, அனைவரது வதனங்களும் அளவற்ற எதிர்பார்ப்போடு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் பக்கம் திரும்புகின்றது.

அவரோ வானத்தின் பக்கம் தலையை உயர்த்தி தனக்கு இத்தனை அற்புத குடிமக்களைத் தந்த அல்லாஹ்வுக்கு மனமுருகி நன்றி செலுத்துகின்றார், அந்த தலைவர்.

இஸ்லாமிய ஆட்சியில் மக்களை மன்னர் ஆளவில்லை; நீதிதான் மக்களுக்கு சேவை செய்து கொண்டிருந்தது.

**இலங்கைக்குரிய பறவைகள்**

**சிவப்பு நிற பார்பட்**
Crimson-fronted Barbed/ Ceylon Small Barbed

**விஞ்ஞானப் பெயர்:**
**Megalaima rubricapilla**



இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் காணலாம். இது பெரும்பாலும் காடுகளில் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிந்திக்க சில துளிகள்

- விடியும் என்ற எண்ணத்தில் தூங்கச் செல்லும் நீ முடியும் என்ற எண்ணத்தில் எழுந்திரு; அனைத்தையும் சாதிக்கலாம்.
- தோல்வி அடைவது தொடர்பில் பயப்படாதே! ஆனால், தோல்விக்கான காரணத்தை அறியாமல் இருந்து விடாதே.
- நீ வாழும்போது பிறரை வாழவை. அப்போதுதான் நீ இறந்த பின் அவர்கள் உன்னை வாழ வைப்பார்கள்.
- அன்பை வெளிப்படுத்த யோசிக்காதே! ஆனால், கோபத்தை வெளிப்படுத்த முன் யோசிக்க மறந்து விடாதே!
- மற்றவர்களுடைய துன்பங்களை உணர முடியாதவன் மனித உருவத்திலுள்ள விலங்காவான்.
- இனிமையாக பழகும் நண்பர்களை விட கசப்பான எதிரிகளுக்கு கடமைப்பட்டவர்களாகிறோம். ஏனெனில், எதிரிகளே உங்களைப் பற்றிய உண்மைகளைப் புரிய வைக்கின்றனர்.
- நல்ல நண்பன் எதுவுமின்றி எதையும் செய்வான். எப்போதும் எதையும் எதிர்பார்க்கவும் மாட்டான்; எதிரியாய் பார்க்கவும் மாட்டான்.
- முள்ளின் திறமையைப் பார்! காலால் மிதித்தவனைக் கூட கையால் எடுக்க வைக்கிறது. யாரும் யாரை விடவும் குறைந்தவர்கள் இல்லை.
- துன்பத்தை நினைத்து வாழ்க்கையை இழக்காதே! சோதனையை நினைத்து சாதனையை இழக்காதே! தோல்வியை நினைத்து வெற்றியை இழக்காதே!

**எம்.ஜே.எப். அப்ரின்**
**பாத்திமா ஸஹ்றா ம.அ.க.**
**ஓட்டமாவடி**

# தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்கள்

1. அரச பாடசாலைகள் - 10612
2. தேசிய பாடசாலைகள் - 353
3. கல்வி வலயங்கள் - 98
4. கல்விக் கோட்டங்கள் - 311
5. கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் - 14022
6. ஆணைக்குழுக்கள் - 11
7. உள்ளூராட்சி சபைகள் - 341
8. பாடசாலை மாணவர்கள் - 4.5 மில்லியன்

**எம்.ஏ.எம். நிமாஸ்**
**ஸிறாஜியா வளாகம்**
**ஓட்டமாவடி - 02**

# பொது அறிவுச் சீடர்கள்

- உலகில் அதிகம் சிலையாக வடிக்கப்பட்ட மனிதன் - லெனின்
- ஸ்பெய்ன் நாட்டின் தேசிய சின்னம் - கழுகு
- இலங்கையின் முதல் சிவில் சேவையாளர் - ஏ.எம்.ஏ. அஸீஸ்
- பாடசாலைகளில் இரண்டு கைகளாலும் எழுதக் கற்றுக் கொடுக்கும் நாடு - ஜப்பான்
- பாகிஸ்தான் உலகின் முதலாவது இஸ்லாமிய குடியரசு நாடானது - 23.03.1956
- இலங்கையில் முதலாவது ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் கல்லூரி - உடுவில் மகளிர் கல்லூரி
  ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1824
- இலங்கையின் தற்போதைய பாராளுமன்ற கட்டடத்தை வடிவமைத்தவர் - ஜிப்ரி பாவா

**பாய்கா பவ்சர்**
**ஹாதிய வளாகம்**
**குரு/குறிகொடுவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பலம் மிக்கவர் இஸ்லாத்தை தழுவுதல்

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பலம் வாய்ந்த வீரராக இருந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்கமுன் இஸ்லாத்தை கடுமையாக எதிர்த்தார்கள். ''யார் முஹம்மதை கொல்வாரோ அவருக்கு நூறு ஒட்டகங்களும் ஆயிரம் வெள்ளி நாணயங்களும் வழங்குவேன்'' என்று அபூஜஹ்ல் கூறினான். இதைக் கேட்ட உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அதற்குத் தயாரானார்கள். நபியவர்களை கொலை செய்யும் நோக்கில் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் சென்றபோது ஒரு நபித்தோழர்;

''உமரே! எங்கே செல்கிறீர்?'' எனக் கேட்டார். ''நான் முஹம்மதைக் கொலை செய்யச் செல்கிறேன்'' என்று உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பதிலளித்தார்கள். அதற்கு அத்தோழர் ''நீர் முஹம்மதைக் கொலை செய்தால் உம்மை முத்தலிபின் சந்ததியினர் விட்டுவைப்பார்களா?'' எனக் கேட்டார். தனது தோழரில் கேள்வியைக் கேட்ட உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ''நீரும் மதம் மாறிவிட்டாயா?'' என்று கேட்டு மேலும் கோபப்பட்டார்கள். அத்தோழர் அமைதியாக ''உமரே! உனது சகோதரி பாத்திமாவும் அவரது கணவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனரே!'' என்றார்.

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு மேலும் கோபம் அதிகரித்தது. சகோதரியின் வீட்டுக்குச் சென்று அவர்களைத் தனது கோபம் தீரும் வரை அடித்தார்கள். பின்னர் அங்கிருந்த குர்ஆன் பிரதி அவர்களின் கண்களில் பட்டதும் அதனை எடுக்க முற்பட்டார்கள். உடனே அவர்களின் சகோதரி ''நீங்கள் குளித்து வுழு செய்து சுத்தமாகாதவரை அதனை தொடக்கூடாது.'' என்று தடுத்தார்கள். நிர்ப்பந்தமாக உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் குளித்துவிட்டு அதனை வாங்கிப் படித்தார்கள். அதில் தாஹா என்ற சூறா எழுதப்பட்டிருந்தது. அதனை படித்ததும் அவர்களின் நிலை மாறியது. என்னையும் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சமூகத்துக்கு அழைத்துச் செல்லுங்கள் எனக்கூறினார்கள். அதன் பின்னர் ''தாருல் அர்கம்'' சென்று நபியவர்களின் கரங்களைப் பற்றி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

எம். மயாஸ்
கொழும்பு ஸாஹிராக் கல்லூரி

**சிந்தனைக் கதை**

## ஆணி ஏற்படுத்திய வடுக்கள்

ஒரு சிறுவன் அதிக கோபக்காரனாக இருந்தான். அடிக்கடி கோபப்படும் அவனால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஒரு நாள் அவனது தந்தை அவனிடம் ஒரு சுத்தியலையும் ஒரு பெட்டி நிறைய ஆணிகளையும் கொடுத்து, ''உனக்கு எப்போதெல்லாம் கோபம் வருகிறதோ அப்போதெல்லாம் நமது வீட்டை சுற்றியுள்ள மர சுற்றுச் சுவரில் ஓர் ஆணி அடி'' என்று கூறினார்.

முதல் நாளே மரச்சுவரில் முப்பத்திரண்டு ஆணிகள் அடித்தான். இதை தொடர்ந்து செய்து வந்தான். சில நாட்கள் கழித்து ஒவ்வொரு முறையும் கோபப்படும்போதும் ஆணி அடிக்க வேண்டியிருந்ததால் கோபம் வரும் வேளையில் கொஞ்சம் யோசிக்கலானான். மூன்று வாரங்கள் கழித்து ஆணி அடிப்பது கொஞ்சம் குறைந்தது.

இப்படி, படிப்படியாக கோபப்படுவதைக் குறைத்து, ஒரு நாள் கோபப்படுவதை அடியோடு நிறுத்தி விட்டான். தன் தந்தையிடம் இதைத் தெரிவித்தான். மிகவும் மகிழ்ச்சியடைந்த அவர் மற்றொரு வேலையைக் கொடுத்தார். இப்போது ஒவ்வொரு முறை கோபத்தைக் கட்டுப்படுத்தும்போதும் அடித்த ஆணியில் ஒன்றை பிடுங்கச் சொன்னார். அவனும் அவ்வாறே செய்தான். எல்லா ஆணிகளும் பிடுங்கி முடித்தவுடன் தந்தையிடம் சொன்னான்.

அவனைப் பாராட்டிய அவர், அவனை அழைத்துக் கொண்டு மரச்சுவரிடம் சென்றார். ஆணி அடித்ததால் ஏற்பட்ட வடுக்களைக் காண்பித்தார். ஆணியைப் பிடுங்கி விட்டாலும் வடுக்களை மறைக்க முடியவில்லை என்பதை உணர்த்தினார்.

கோபத்தால் மற்றவர்களின் மீது நாம் ஏற்படுத்தும் வடுக்களை மன்னிப்புக் கேட்பதாலும் வேறு நல்ல செயல்கள் செய்வதாலும் சரிப்படுத்த முடியாது. வடு ஏற்பட்டது ஏற்பட்டதுதான். கோபப்படாமல் இருப்பதே சிறந்த வழி என்று அவனுக்கு அறிவுரையும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையின் கல்வித்துறை

பாடசாலைக் கல்வி

- 1931 - இலவசக் கல்வி வழங்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.
- 1943 - இலவசக் கல்வி ஆலோசனை முன்வைக்கப்பட்டது.
- 1945 - இலவசக் கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது
- 1952 - புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பமானது.
- 1956 - சுயமொழிகள் போதனை மொழிகளாக மாற்றப்பட்டன.
- 1960 - பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டன.
- 1968 - பாடசாலைகளில் விசுகொத்து நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பமானது.
- 1980 - இலவச பாடநூல் வெளியிடப்பட்டது.
- 1987 - தேசிய பாடசாலை உருவாக்கும் நடைமுறை ஆரம்பமானது.
- 1989 - இலவச மதிய உணவுத் திட்டம் ஆரம்பமானது.
- 1993 - இலவச சீருடை விநியோகம் ஆரம்பமானது.
- 1994 - இலவச மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டது.
- 1998 - பல்கலைக்கழக அனுமதிக்கான பொதுச் சாதாரண பரீட்சை ஆரம்பமானது.
- 2002 - SBA பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண பெறுபேற்றுடன் சேர்க்கப்பட்டது.
- 2005 - SBA பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர பெறுபேற்றுடன் சேர்க்கப்பட்டது.

உயர்க் கல்வி

- 1893 - முதலாவது தொழிநுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1921 - இலங்கை பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1942 - இலங்கை பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.
- 1973 - ஜாமீஆ நளீமிய்யா நிறுவப்பட்டது.
- 1978 - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டது.
- 1980 - திறந்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
- 1981 - மஹபொல புலமைப்பரிசில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1985 - தேசிய கல்வியல் கல்லூரிகள் அமைக்கப்பட்டன.
- 2005 - ஊவா வெல்லச பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

**பாத்திமா நுஸ்ரா**
**ஸாஹிரா கல்லூரி**
**குருணாகல்**

## எம் ஆசிரியர்கள்

தரம் ஒன்று முதல் 11 வரை
அம்மா என்ற சொல்லுடன் ஆரம்பித்து
என் அறிவுக் கண்ணை திறந்த
எம் ஆசிரியர்கள்

அறிவு எனும் மூன்றெழுத்தில்
முன்னேற வழிகாட்டியாக இருந்து
என் கண்ணைத் திறந்த
எம் ஆசிரியர்கள்

எத்தனையோ சண்டைகள்
எத்தனையோ கோபங்கள்
இருந்தாலும்
எம் பாடசாலை வாழ்க்கையை
மறக்க முடியுமா?
இறக்கும் வரை என்றும்
எம் ஆசிரியருக்காக
பிரார்த்திக்கிறேன்

**இப்ஹாமா இஸ்மாஈல்**
**அகலவத்த மு.வி.**
**பெலந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் திருமணங்களில் மூன்று ஹிஜ்ரத்துக்கு முன்னர் நடந்தேறின. அம் மூன்று மனைவியர்களும் யாவர்?
2. கை, கால்களில் முறிவு, மூட்டு விலகல் போன்றவை ஏற்பட்டால் சிறு தடிகளை வைத்துக் கட்டுப்போடுகிறோம். இவ்வாறான கட்டு அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
3. 'நத்ர்' என்பதன் கருத்து யாது?
4. 'தப்ஹ்' என்பதன் கருதுவது யாது?
5. பத்ர் போரில் ஹஸரத் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் முஸ்லிம்களின் பக்கம் நின்று போராடியபோது அன்னாரின் புதல்வர் எதிரிகள் பக்கம் நின்று போராடினார். அவரின் பெயர் என்ன?
6. இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த காப்பியங்களுள் ஒன்றான புதூ குஷ்ஷாம் எத்தனை காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன? அவை எவை?
7. இமாம் புஹாரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பிறந்த ஹிஜ்ரி ஆண்டு எது?
8. ஆரம்பத்தில் தொழுகை கடமையாக்கப்பட்ட போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் ஸஹாபாக்களும் மஸ்ஜிதுல் அக்ஸாவில் (பைத்துல் முகத்திஸின்) பக்கமே முகம் நோக்கித் தொழுது வந்தார்கள். ஒருநாள் தொழுது கொண்டிருக்கும்போது மஸ்ஜிதுல் ஹரம் (கஃபா) பக்கம் முகத்தைத் திருப்பும்படி அல்லாஹ்வின் கட்டளை பிறந்தது. நபியவர்களும் தொழுது கொண்டே கஃபாவின் பக்கம் முகத்தைத் திருப்பினார்கள். ஸஹாபாக்களும் அதைத் தொடர்ந்தார்கள். அன்றிலிருந்து புனித கஃபா கிப்லாவாகியது. இது எந்த ஹிஜ்ரி ஆண்டில் நடந்தது?
9. பகுத்தறிவுக்கும் புலனறிவுக்கும் அப்பாற்பட்ட இறைவனால் நேரடியாக உணர்தல் அல்லது ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) மூலமாக உணர்தல் அல்லது அல்லாஹ் திரைமறைவில் இருந்து பேசுதல் வஹி என அழைக்கப்படுகிறது. இதன் தமிழ்ப் பதம் யாது?
10. இஸ்லாமிய சட்டமூலாதாரங்களுள் ஒன்றான கியாஸ் நான்கு ருக்கூன்களைக் கொண்டது. அவை எவை?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. இலங்கையின் புராதன வரலாறு விவசாயத் துறையின் பொற்காலமாகத் திகழ்ந்தது. மன்னனுக்கு மக்களும் மக்களுக்கு மன்னனும் ஒருவருக்கொருவர் தோள்கொடுத்து விவசாயத்துறையில் நாட்டை வளப்படுத்திக் கொண்டிருந்தனர். இதற்காகப் பற்பல நீர்ப்பாசனத் திட்டங்களை வெற்றிகரமாகச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் இலங்கையில் மிகப் பெரிய நீர்ப்பாசனக் குளம் எது?
2. பௌத்த மதத்தைப் போதிப்பதற்காக மஹிந்த தேரர் இலங்கைக்கு வருகை தந்தது கி.மு. எத்தனையாம் ஆண்டிலாகும்?
3. கோட்டை இராச்சியத்தைப் போர்த்துக்கேயர்கள் கைப்பற்றுவதற்கு வாய்ப்பாக அமைந்தது வயதில் குறைந்த மன்னன் தர்மபாலன் அங்கு ஆட்சி செய்ததாகும். இம்மன்னன் பௌத்த மதத்திலிருந்து கிறிஸ்தவ சமயத்துக்கு மாறித் தன்னுடைய பெயரையும் மாற்றிக் கொண்டான். இவ்வாறு மாற்றிக் கொண்ட புதிய பெயரைக் கூறுக?

(விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் அரபு மொழி اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# CARDINALS – جَدْوَلُ الْأَعْدَادِ الْأَصْلِيَّةِ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | وَاحِدٌ | 30 | ثَلَاثُوْنَ | 59 | تِسْعَةٌ وَخَمْسُوْنَ |
| 2 | اِثْنَانِ | 31 | وَاحِدٌ وَثَلَاثُوْنَ | 60 | سِتُّوْنَ |
| 3 | ثَلَاثَةٌ | 32 | اِثْنَانِ وَثَلَاثُوْنَ | 61 | وَاحِدٌ وَسِتُّوْنَ |
| 4 | أَرْبَعَةٌ | 33 | ثَلَاثَةٌ وَثَلَاثُوْنَ | 62 | اِثْنَانِ وَسِتُّوْنَ |
| 5 | خَمْسَةٌ | 34 | أَرْبَعَةٌ وَثَلَاثُوْنَ | 63 | ثَلَاثَةٌ وَسِتُّوْنَ |
| 6 | سِتَّةٌ | 35 | خَمْسَةٌ وَثَلَاثُوْنَ | 64 | أَرْبَعَةٌ وَسِتُّوْنَ |
| 7 | سَبْعَةٌ | 36 | سِتَّةٌ وَثَلَاثُوْنَ | 65 | خَمْسَةٌ وَسِتُّوْنَ |
| 8 | ثَمَانِيَةٌ | 37 | سَبْعَةٌ وَثَلَاثُوْنَ | 66 | سِتَّةٌ وَسِتُّوْنَ |
| 9 | تِسْعَةٌ | 38 | ثَمَانِيَةٌ وَثَلَاثُوْنَ | 67 | سَبْعَةٌ وَسِتُّوْنَ |
| 10 | عَشَرَةٌ | 39 | تِسْعَةٌ وَثَلَاثُوْنَ | 68 | ثَمَانِيَةٌ وَسِتُّوْنَ |
| 11 | أَحَدَ عَشَرَ | 40 | أَرْبَعُوْنَ | 69 | تِسْعَةٌ وَسِتُّوْنَ |
| 12 | اِثْنَا عَشَرَ | 41 | وَاحِدٌ وَأَرْبَعُوْنَ | 70 | سَبْعُوْنَ |
| 13 | ثَلَاثَةَ عَشَرَ | 42 | اِثْنَانِ وَأَرْبَعُوْنَ | 71 | وَاحِدٌ وَسَبْعُوْنَ |
| 14 | أَرْبَعَةَ عَشَرَ | 43 | ثَلَاثَةٌ وَأَرْبَعُوْنَ | 72 | اِثْنَانِ وَسَبْعُوْنَ |
| 15 | خَمْسَةَ عَشَرَ | 44 | أَرْبَعَةٌ وَأَرْبَعُوْنَ | 73 | ثَلَاثَةٌ وَسَبْعُوْنَ |
| 16 | سِتَّةَ عَشَرَ | 45 | خَمْسَةٌ وَأَرْبَعُوْنَ | 74 | أَرْبَعَةٌ وَسَبْعُوْنَ |
| 17 | سَبْعَةَ عَشَرَ | 46 | سِتَّةٌ وَأَرْبَعُوْنَ | 75 | خَمْسَةٌ وَسَبْعُوْنَ |
| 18 | ثَمَانِيَةَ عَشَرَ | 47 | سَبْعَةٌ وَأَرْبَعُوْنَ | 76 | سِتَّةٌ وَسَبْعُوْنَ |
| 19 | تِسْعَةَ عَشَرَ | 48 | ثَمَانِيَةٌ وَأَرْبَعُوْنَ | 77 | سَبْعَةٌ وَسَبْعُوْنَ |
| 20 | عِشْرُوْنَ | 49 | تِسْعَةٌ وَأَرْبَعُوْنَ | 78 | ثَمَانِيَةٌ وَسَبْعُوْنَ |
| 21 | وَاحِدٌ وَعِشْرُوْنَ | 50 | خَمْسُوْنَ | 79 | تِسْعَةٌ وَسَبْعُوْنَ |
| 22 | اِثْنَانِ وَعِشْرُوْنَ | 51 | وَاحِدٌ وَخَمْسُوْنَ | 80 | ثَمَانُوْنَ |
| 23 | ثَلَاثَةٌ وَعِشْرُوْنَ | 52 | اِثْنَانِ وَخَمْسُوْنَ | 81 | وَاحِدٌ وَثَمَانُوْنَ |
| 24 | أَرْبَعَةٌ وَعِشْرُوْنَ | 53 | ثَلَاثَةٌ وَخَمْسُوْنَ | 82 | اِثْنَانِ وَثَمَانُوْنَ |
| 25 | خَمْسَةٌ وَعِشْرُوْنَ | 54 | أَرْبَعَةٌ وَخَمْسُوْنَ | 83 | ثَلَاثَةٌ وَثَمَانُوْنَ |
| 26 | سِتَّةٌ وَعِشْرُوْنَ | 55 | خَمْسَةٌ وَخَمْسُوْنَ | 84 | أَرْبَعَةٌ وَثَمَانُوْنَ |
| 27 | سَبْعَةٌ وَعِشْرُوْنَ | 56 | سِتَّةٌ وَخَمْسُوْنَ | 85 | خَمْسَةٌ وَثَمَانُوْنَ |
| 28 | ثَمَانِيَةٌ وَعِشْرُوْنَ | 57 | سَبْعَةٌ وَخَمْسُوْنَ | 86 | سِتَّةٌ وَثَمَانُوْنَ |
| 29 | تِسْعَةٌ وَعِشْرُوْنَ | 58 | ثَمَانِيَةٌ وَخَمْسُوْنَ | 87 | سَبْعَةٌ وَثَمَانُوْنَ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 88 | ثَمَانِيَةٌ وَثَمَانُوْنَ | 103 | مِائَةٌ وَثَلَاثَةٌ | 600 | سِتُّ مِائَةٍ |
| 89 | تِسْعَةٌ وَثَمَانُوْنَ | 110 | مِائَةٌ وَعَشَرَةٌ | 700 | سَبْعُ مِائَةٍ |
| 90 | تِسْعُوْنَ | 111 | مِائَةٌ وَأَحَدَ عَشَرَ | 800 | ثَمَانُ مِائَةٍ |
| 91 | وَاحِدٌ وَتِسْعُوْنَ | 119 | مِائَةٌ وَتِسْعَةَ عَشَرَ | 900 | تِسْعُ مِائَةٍ |
| 92 | اِثْنَانِ وَتِسْعُوْنَ | 120 | مِائَةٌ وَعِشْرُوْنَ | 1000 | أَلْفٌ |
| 93 | ثَلَاثَةٌ وَتِسْعُوْنَ | 190 | مِائَةٌ وَتِسْعُوْنَ | 2000 | أَلْفَانِ |
| 94 | أَرْبَعَةٌ وَتِسْعُوْنَ | 199 | مِائَةٌ وَتِسْعَةٌ وَتِسْعُوْنَ | 3000 | ثَلَاثَةُ آلَافٍ |
| 95 | خَمْسَةٌ وَتِسْعُوْنَ | 200 | مِائَتَانِ | 4000 | أَرْبَعَةُ آلَافٍ |
| 96 | سِتَّةٌ وَتِسْعُوْنَ | 300 | ثَلَاثُ مِائَةٍ | 5000 | خَمْسَةُ آلَافٍ |
| 97 | سَبْعَةٌ وَتِسْعُوْنَ | 400 | أَرْبَعُ مِائَةٍ | 20000 | عِشْرُوْنَ أَلْفًا |
| 98 | ثَمَانِيَةٌ وَتِسْعُوْنَ | 500 | خَمْسُ مِائَةٍ | 50000 | خَمْسُوْنَ أَلْفًا |
| 99 | تِسْعَةٌ وَتِسْعُوْنَ | | | | |
| 100 | مِائَةٌ | | | | |
| 101 | مِائَةٌ وَوَاحِدٌ | | | | |
| 102 | مِائَةٌ وَاِثْنَانِ | | | | |

**ஒரு இலட்சம் 100 000** مِائَةُ أَلْفٍ

**10 இலட்சம் = 1 மில்லியன்** مَلْيُوْنٌ


**20 இலட்சம் = 2 மில்லியன்** مَلْيُوْنَانِ

**30 இலட்சம் = 3 மில்லியன்** ثَلَاثَةُ مَلَايِيْنَ

| | | |
|---|---|---|
| 40 இலட்சம் | = 4 மில்லியன் | أَرْبَعَةُ مَلَايِيْنَ |
| 50 இலட்சம் | = 5 மில்லியன் | خَمْسَةُ مَلَايِيْنَ |
| 60 இலட்சம் | = 6 மில்லியன் | سِتَّةُ مَلَايِيْنَ |
| 70 இலட்சம் | = 7 மில்லியன் | سَبْعَةُ مَلَايِيْنَ |
| 80 இலட்சம் | = 8 மில்லியன் | ثَمَانِيَةُ مَلَايِيْنَ |
| 90 இலட்சம் | = 9 மில்லியன் | تِسْعَةُ مَلَايِيْنَ |
| 100 இலட்சம் | = 10 மில்லியன் / 1 கோடி | عَشَرَةُ مَلَايِيْنَ |
| 200 இலட்சம் | = 20 மில்லியன் / 2 கோடி | عِشْرُوْنَ مَلْيُوْنًا |
| 300 இலட்சம் | = 30 மில்லியன் / 3 கோடி | ثَلَاثُوْنَ مَلْيُوْنًا |
| 400 இலட்சம் | = 40 மில்லியன் / 4 கோடி | أَرْبَعُوْنَ مَلْيُوْنًا |
| 500 இலட்சம் | = 50 மில்லியன் / 5 கோடி | خَمْسُوْنَ مَلْيُوْنًا |
| 600 இலட்சம் | = 60 மில்லியன் / 6 கோடி | سِتُّوْنَ مَلْيُوْنًا |
| 700 இலட்சம் | = 70 மில்லியன் / 7 கோடி | سَبْعُوْنَ مَلْيُوْنًا |
| 800 இலட்சம் | = 80 மில்லியன் / 8 கோடி | ثَمَانُوْنَ مَلْيُوْنًا |
| 900 இலட்சம் | = 90 மில்லியன் / 9 கோடி | تِسْعُوْنَ مَلْيُوْنًا |
| 1000 இலட்சம் | = 100 மில்லியன் / 10 கோடி | مِائَةُ مَلْيُوْنٍ |
| 2000 இலட்சம் | = 200 மில்லியன் / 20 கோடி | مِئَتَا مَلْيُوْنٍ |
| 300 மில்லியன் / 30 கோடி | | ثَلَاثُ مِائَةِ مَلْيُوْنٍ |
| 900 மில்லியன் / 90 கோடி | | تِسْعُ مِائَةِ مَلْيُوْنٍ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,

This time I thought taking you all back into the past. So friends be prepared to go to the past where I'll be taking you all to England. Do you know back then in England there was a practice of cleaning tall and large chimneys by sending people up through the chimneys? The masters of that time used to higher people in order to clear the thick black soot that used to get collected up in the chimneys. Mostly the masters would higher or buy little children in the age of six or less for the purpose of cleaning the chimneys. Many social, psychological and physical damages occurred due to this practice. In this I'll be sharing with you all the dark history about chimney sweeps. Below is a paragraph about children being kept as chimney sweeps, read the paragraph thoroughly and try to answer the questions given below.

There was a time in history, in which the job of cleaning a chimney was carried out by a child who would climb the chimney while holding a brush over his head. The soot would fall down over the child and down to the bottom of the fireplace. The child would then slide back down the chimney, collect the soot, and hand it over to the master sweep, who, in effect, owned him. And this isn't even the worst of it. Small boys, usually 6 years of age, were purchased from their poverty stricken parents by a master sweep. The children became the property of the master sweeps and were virtually always cruelly treated, essentially living the life of slaves in some of the worst conditions imaginable. This practice of sending small boys up and down chimneys in order to ensure that they were free of harmful creosote deposits was the norm in England for approximately 200 years. The use of child chimney sweeps became widespread after the Great Fire of London, which occurred in September of 1666. When the city was rebuilt, building regulations were changed. Fireplaces had to have narrow chimneys, as a part of an effort to stop a repeat of the devastating London fire.



As a result, it became the life of generations of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

small boys that they were made to wake before dawn and work mercilessly. The children would climb up the chimneys using their elbows, back, and knees. The master sweep would scrub their knees to harden them; but before calluses formed, the children were usually seriously bloodied.

There were many hazards associated with human chimney sweeps. Children got stuck in the 18-inch-wide chimneys; sometimes it was due to climbing technique and when children had to go up chimneys which had turns, they became lodged between tight corners and walls of soot. A second child would usually be sent into a chimney to rescue the first, and they would sometimes both die for various reasons. On occasion, the walls of a home would have to be torn down to remove the child or children lodged in the flue. These children received no wages, but they were beaten if they didn't work well and quickly enough to suit the master sweep. They received little food and usually slept in basements on top of the blackened bags used to collect soot.

As a result of their work, the children often had lung problems, and their eyes would swell, becoming sore and inflamed. Many children became disfigured or had stunted growth because they were placed in such unnatural positions before their bones were fully formed. (Retrieved from: https://www.ctsweep.com/blog/top-sweep-stories/child-chimney-sweeps/)



Isn't it saddening to read about this bitter past? Now that you have read the passage try to find the answers to the following questions

1. For how long does the practice of chimney sweeping has been taking place in England?
2. What was the reason behind introducing children as chimney sweeps?
3. How would the children climb up the chimneys?
4. Did the children receive any wages for working as chimney sweeps? what did they receive instead?
5. What happened to those children who ended up as chimney sweeps?

Try answering the questions with the help of an elder or your English teacher.

## Hadith of the month

"What people, animals or birds eat of the fruit of those trees or crops planted or raised by a Muslim is a charity for him."

[Bukhari, Adab (Manners), 27; Muslim, Musaqah, 7, 10]

## *Laugh* a while:

**Teacher:** If the sun doesn't rise what will happen?

**Fathima:** We can sleep peacefully!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your Corner

# Good Manners

Good manners refer to polite, humble, courteous, respectful and well-cultured social behaviour. A man or woman above everything else is esteemed and distinguished on account of his or her good manners. Using expressions like thank you, please, excuse me, I am sorry compliment other for their good qualities. Always knock the door before entering into others' bed rooms. It has been rightly said that "manners make a full man". Standard of good manners differ from country to country. But one thing is in common to all that is to show respect and reverence to all with whom we come in contact. So, with these manners let's be models to our future generation.

**Fahma Shibly**
**Grade 08**
**K/Madhina National school,**
**Madawala Bazar**



# My family

In my family I have my mother, father, brother, grandmother, grandfather and me. My family is very good. Our family name is Tennakoon. My brother's name is Rafkhan. He is 17 years old. My father is a manager of a hotel and my mother is an accountant. I love my family.

**A.W.F Rameeja**
**Fathima Zahra Ladies A.C**



# Get motivated

1. Yesterday is not ours to recover. Byt tomorrow is ours to win (Lyndon B. Johnson)
2. Start by doing what's necessary; than doing what's possible; and suddenly you will be ding the impossible (Fracis of Assisi)
3. Happiness is when what you think, what you say, and what you are in harmony (Mahathma Gandhi)
4. A good plan executed now is better than a perfect plan executed next week (George S. Pettol)
5. In the end it's not the year in year that counts it's the life in your years (Abraham Lincoln)
6. Our greatest weakness lies in giving up, the best way to succeed is to try one more time (Thomas. A.Edison)
7. Success is nothing more than a few simple disciplines practiced everyday (Jim Rohn)
8. You can't corss the sea merely by standing and staring at the water (Rabindranath Tagore)
9. When it's obvious that the goals cannot be reached, don't adjust goals adjust the action steps (Confusius)
10. Learn from yesterday. Live for today. Hope for tomorrow (Albert Einstein)

**Suraija Shiyam**
**10 A**
**WP/MT/ Rahmaniya M.V**
**Welipenna**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

**I learn every day**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஜீனியஸ்?

1. ஒரு நாளைக்கு மனிதன் சுவாசிக்கும் வளியில் அளவு எத்தனை சிலிண்டர்கள்?
2. இலங்கையின் சட்ட சபைக்கு நியமிக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் யார்?
3. 2017ஆம் ஆண்டு ஆசிய மகளிர் ஹொக்கி போட்டிகளில் வெற்றி பெற்ற நாடு எது?
4. சதுரங்க விளையாட்டின் தாயகம் எது?
5. அர்ஜென்டினா நாட்டின் தலைநகரம் எது?
6. scanner என்பதன் தமிழ் பதம் யாது?
7. இலங்கையின் பாராளுமன்ற கட்டிடத்தை வடிவமைத்தவர் யார்?
8. மஹபொல புலமைப்பரிசில் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
9. தற்போது இலங்கையில் உள்ள எயிட்ஸ் நோயாளிகள் எண்ணிக்கை யாது?
10. மனித உரிமைகள் பிரகடனம் எப்போது ஐ.நா சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது?

## போட்டியின் நிபந்தனைகள்

01. தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான புத்தக பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

02. சரியான விடையை தபால் அட்டையில் மாத்திரம் எழுத வேண்டும்.

03. விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**அகரம் இதழ்**
No 77, Sri Vajiragnana mw
Colombo-09

04. போட்டி முடிவுத்திகதி 20.12.2017



**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா), ஸவ்தா (ரழியல்லாஹு அன்ஹா), ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) ஆகியோர்.
2. ஜபீறத்
3. நேர்ச்சை
4. அறுத்தல்
5. அப்துர் ரஹ்மான்
6. 3. முஹம்மதியா, ஸித்தீக்கியா, பாலுக்கியா
7. ஹிஜ்ரி 194 இல்
8. ஹிஜ்ரி 2 இல்
9. செய்தி அல்லது எதிர்வுகூறல்
10. அஸ்ல், பர்உ, இல்லத், ஹுகும்

**பொது அறிவு**

1. கல்லோயாத்திட்டத்தில் அமைந்திருக்கும் சேன நாயக்க சமுத்திரம்
2. கி.மு. 247
3. ஜோன்

## எண்ணங்களின் வண்ணங்கள் - 25

## தலைப்பு: பூந்தோட்டம்

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 டிசம்பர் 20**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதிப் பகுதி

# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 24

## முஸ்லிம் சமூக அரசியல் மறுமலர்ச்சி


அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்தெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்



19 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இலங்கையின் சமூக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் அரசியல் துறையில் இலங்கையர்கள் கவனம் செலுத்தக் காரணமாகின. குறிப்பாக, 1833 இல் நடைமுறைக்கு வந்த கோல்புறுக் கமரன் அரசியல், சட்ட சீர்திருத்த யாப்பு இலங்கையரின் அரசியல் பிரவேசத்துக்கு வழியமைத்தது.

கோல்புறுக் அறிமுகப்படுத்திய சட்ட நிரூபன சபையில் இலங்கையர்களும் இடம் பெற்றனர். சிங்களவர், தமிழர் என்ற இரு இனங்களுக்கும் இதில் இடம் கிடைத்தது. முஸ்லிம்கள் எவரும் ஆரம்பத்தில் இதில் இடம்பெறவில்லை. எனவே, முஸ்லிம்களின் தேவைகள் உரிமைகள் பற்றி பேசுவதற்கு எவரும் இருக்கவில்லை.

19 ஆம் நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் காணப்பட்ட பல்வேறு சிக்கல்களுக்கும் சமூக சீர்கேடுகளுக்கும் பிரதான காரணமாக விவாகப் பதிவு நடைமுறையில் இல்லாமல் இருந்தமை பிரதான காரணியாக அமைந்தது. எனவே, கல்வி கற்ற இலங்கை முஸ்லிம்களிடத்தில் விவாகப் பதிவு கட்டாயமாக்கப்படல் வேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றது. எனினும், இச் சிந்தனைக்கான சட்ட அங்கீகாரம் பெறுவதற்கு சட்ட நிரூபன சபையில் அதனை முன்வைக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால், அதனை செயற்படுத்தக்கூடிய முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் சட்ட நிரூபன சபையில் இருக்கவில்லை.

இந்த மசோதாவை அரசு சட்டமன்றத்தில் சமர்ப்பித்தபோது அப்போது தமிழர்களின் பிரிதிநிதியாக இருந்த சேர்.பொன்னம்பலம் இராமநாதன் இதனை எதிர்த்துப் பேசினார். கட்டாய விவாகப் பதிவு அவசியமற்றது என்றும் அதனை விருப்பத்துக்குரியதாக வைப்பதே பொருத்தமானது என்றும் அவர் வாதிட்டார். இந்த விவாதத்தில் அவர் முன்வைத்த சில கருத்துகள் முஸ்லிம்களின் அரசியல் பிரவேசத்தின் தேவையை உணர்த்தின.

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் முஸ்லிம்கள் இனத்தாலும் மொழியாலும் தமிழர்களே; அவர்கள் ஒரு தனி இனத்தவர் அல்லர் என அவர் கூறினார். சமயத்தால் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தால் தமிழர்களே எனக் கூறினார். இதன் மூலம் முஸ்லிம்களுக்கு சட்ட நிரூபன சபையில் தனிப் பிரதிநிதித்துவம் அவசியமற்றது என்ற கருத்தை மறைமுகமாக முன்வைத்தார்.

இத்தகையதொரு சூழலில் சட்டநிரூபன சபையில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து முஸ்லிம்களிடத்தே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அறிஞர் சித்தி லெப்வை வெற்றி கண்டார். இக்காலப் பகுதியில் கொழும்பில் வாழ்ந்த பொருளாதார வளம்மிக்க தனவந்தர்களே துருக்கி கவுன்ஷிலர்களாக நியமிக்கப்பட்டனர். அரசியில் ரீதியாக இது பலம்மிக்க ஒரு வழியாக இருக்கவில்லை.

சட்ட நிரூபன சபையில் முஸ்லிம் பிரதிநிதித் துவத்தைப் பெறுவதற்கு பலத்த முயற்சிகள் சித்தி லெப்பையின் தலைமையில் மேற்கொள்ளப் பட்டன. கவர்னர் ஆத்தர் ஹமில்டனிடம் 1885 இல் கண்டி முஸ்லிம்கள் 200 பேர் கையொப்பமிட்டு மகஜர் சமர்ப்பித்தனர். அதில் சட்ட நிரூபன சபைக்கு முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் நியமிக் கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது.



இதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்ய முடியும் என படித்த முஸ்லிம்கள் நம்பினர். எனவே, அப்பத விக்கு கல்விகற்ற ஒருவரே நியமிக்கப்படல் வேண்டும் எனக் கோரினார். குறிப்பாக, சித்தி லெப்பை இதற்கு நியமிக்கப்படல் வேண்டும் என்றனர். எனினும், 1889 ஆம் ஆண்டு முஹம்மத் காசிம் அப்துர்ரஹ்மான் எனும் பிரபல வர்த்தகர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இவ்வகையில் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முஸ்லிம்களின் சட்ட நிரூபன சபைப் பிரவேசம் அரசியல் பிரவேசத்தின் முதல் படியாக அமைந்தது. எனினும், சட்ட நிரூபன சபையில் வேறு இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்த வர்கள் படித்தவர்களாக சமூக அறிவும் அரசியல் ஞானமும் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்த நேரத்தில், முஸ்லிம்களின் பிரதிநிதி வர்த்தக சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தமை முஸ்லிம் சமூகத்தில் காணப்பட்ட போட்டி உணர்வையும் மரபு வழி சார்ந்தோரின் மேலாதிக்கத்தையும் உணர்த்துகின்றது.

முஸ்லிம்களின் பங்களிப்புகள் பற்றிய எமது இந்த நீண்ட நெடுந்தொடர் இரண்டு ஆண்டு களைத் தொடும் தறுவாயில் இந்த இதளோடு நிறைவுறுகிறது. அனுராதபுர காலம் முதல் 19 ஆம் நூற்றாண்டு முடியும் வரை நாம் கடந்து வந்த வர லாற்றுப் பாதையை அதன் வளைவு நெளிவுகளை, சாதனைகளை மிகச் சுருக்கமாக பேசி வந்தோம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் அதன் ஆரம்ப நாட்களில் அறிமுகமாகும் அரேபிகளின் வாரிசுகளான இலங்கை முஸ்லிம்கள் இன்றுவரை தேசிய சமூக வாழ்வில் இலங்கையர் என்ற தனித் துவ அடையாளத்துடன் வாழ்ந்துள்ளமையை மன்னர்களின் வரலாற்றுப் பின்னணியில் விளங்கி இருக்கிறோம்.

அரசியல், சமூக, பொருளாதார, வணிக, மருத்துவ துறைகளில் முஸ்லிம்கள் வழங்கிய தேசியப் பங்களிப்புகள் வரலாற்றேடுகளில் உயிர் வாழ்வதைக் கண்டோம். எனவே, ஒரு மகோன்னத வரலாற்றின் வாரிசுகளான நாங் கள் எமது எதிர்கால சந்ததியினருக்கு எதனை இன்று விட்டுச் செல்கிறோம் என்பது சிந்தனைக் குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# பெருநாள்

மபாஸா மாஹிர்
ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா

''வீட்டுல யாராச்சும் இருக்கிறீங்களா?... தாத்தா யாராச்சும் இருக்கிறீங்களா?''

கதவு தட்டும் சப்தம் கேட்டு சலீமா கதவைத் திறக்கிறாள்.

''தாத்தா ரெண்டு நாளா ஒண்டும் தின்னல்ல. எவ்வளவாச்சும்...'' என்று சொல்லும் போதே...

''வந்து விட்டிங்களா எங்க இன்னம் காணம் என்றுதான் பார்த்தேன். பெருநாள் வந்தால் போதுமே! எல்லாரும் வரிசையாக வந்துருவீங்களே!''

என்று நச்சரித்தவாறே நேற்றைய பழைய சோற்றை பெருமிதத்துடன் கொடுக்கிறாள் சலீமா.

என்ன செய்ய துன்பநிலை அதை வாங்கிக் கொண்டு அடுத்த தெருவிற்கு நடக்கிறாள் சுலைஹா. அவளின் ஓட்டை குடிசையில் பிள்ளைகள் அவளுக்காய் காத்திருந்தார்கள். அவள் சாப்பாட்டை கொடுத்தவுடன் அவசரமாக பிரித்து அதை உண்ண ஆரம்பிக்கிறார்கள்.

''உம்மா! அது காசிமின் உம்மாதான். இப்ப வந்துட்டு போனவ. நா அடிக்கடி சொல்வேனே பாவம்... அந்தக் குடும்பம்'' என்று சலீம் இழுக்கும் போதே சலீமாவோ அதுக்கு பதிலாக,

''ஊர்ல உள்ள கஷ்டமானவர்களுக் கெல்லாம் நாங்களா கொடுக்கனும். ஹே... யாராச்சும் கொடுக்கட்டும்'' என்று நச்சரிக்கிறாள்.

அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... காதுக்கினிய தக்பீர் ஒலி நாற்திசைகளிலும் ஒலிக்கிறது. ''சலீம் ரெடியாகிட்டியா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவாறே அறைக்குள் நுழைந்தான் ஹகீம். ''என்ன சலீம் நாம் வாங்கித் தந்த புதுசேர்ட் எங்க? பெருநாளன்று பழைய சேர்ட்டை அணிந்திருக்கிறாய்...'' என்று ஹகீம் கேட்க, சலீம் பதில் கூறவில்லை. பதிலுக்கு அவன் கால்களிரண்டும் நடுங்கின.

ஹகீம் கேட்க கேட்க சலீம் சொல்லவே இல்லை. வந்த கோபத்தில் ஹகீம் சலீம் மீது கைநீட்டுகிறான்.

சப்தம் கேட்டு ஓடி வந்தாள் சலீமா. சலீம் வலியால் துடிக்கிறான். ஆனால் பதில் சொல்லவில்லை.

''நீ சொல்லாவிடின் இன்று உனக்கு பெருநாள் இல்லை'' என்று அதட்டுகிறான் ஹகீம்.

சலீம் தேம்பித் தேம்பியே ''காசிம்...'' என்ற பெயரை உச்சரிக்க சலீமாவிற்கு கோபம் கொந்தளிக்கிறது. அவன் அழுதவாறே என் புதுசேர்டை காசிமிற்கு கொடுத்து விட்டேன் என்கிறான். இதை சற்றும் எதிர்ப்பார்க்காத ஹகீம் ''ஏன் அவன்ட வாப்பா வாங்கி கொடுப்பார்தானே. நீ ஏன் பெரிய தனவந்தன் போல் வாரிக் கொடுக்கிறாய்'' என்று கத்தினார்.

சலீம் தொடர்கிறான், ''அவனுக்கு வாப்பா இல்லை... நல்ல கெட்டிக்காரன்... அவனால் படிப்பை தொடர காசில்லை... அவனோடு அவன் வீட்டில் ஐந்து சகோதரர்கள்... அவர்களும் படிப்பை கைவிடும் நிலையிலே இருக்கிறார்கள்... ஒருவேளை சாப்பாடு கிடைப்பதே கஷ்டம்... அவன்ட உம்மாவுக்கு வயசு போயிருச்சி... உழைச்சி சாப்பிட தெம்பில்லை... எனக்கு உம்மா காலையிலே தார சாப்பாட்டை நான் அவனுக்கு கொடுப்பேன்... அவன் அதை காலையில் சாப்பிடாமல் பகல் உணவிற்காக எடுத்துச் செல்வான்.''

இதை கேட்டுக் கொண்டிருந்த சலீமாவும் ஹகீமும் தன் புதல்வனை நினைத்து பெருமை அடைந்தனர். ஆனாலும் சலீமாவின் அடிமனது கதறுகிறது. அது அவளுக்கே நீ ஒரு மனசாட்சி இல்லாத பெண் என்று கூறுவது போலிருந்தது. சற்று நேரம் அங்கே அமைதி நிலவ அவ் அமைதியை கலைக்கும் வண்ணமாக,

''சரி... சரி... அவசரமாக வா. பள்ளிக்குப் போகனும்'' என்று ஹகீம் சலீமை கூட்டிச் செல்கிறான்.

❖ ❖ ❖

மணித்தியாலங்கள் உருண்டோடுகின்றன. சலீமா சமயலறையில் மூழ்கிறாள். ஹகீம் மற்ற வேலைகளில் மும்முரமாக ஈடுபடுகின்றான். சலீமிற்கு ஒன்றும் புரியவில்லை. அதற்கிடையில் ஹகீம் காரில் ஏறி சலீமை அழைக்கிறான். ஒன்றும் புரியாமல் சலீமும் ஏறுகிறான். நேரே கார் Sweet கடையில் நிறுத்தப்படுகிறது. ஹகீம் சலீமிற்கே தெரிவு செய்ய சொல்கிறான். பிறகு பெரிய உடுப்புக் கடையில் நிறுத்துகிறான். சலீம் பொறுமையை இழந்து,

''வாப்பா இன்டைக்கு யாராலும் பெரிய விருந்தினர் வருகிறார்களா?'' என்று கேட்க, ''ம்ம்... ம்ம்... பெரிய விருந்தினர்கள் எம் வீட்டுக்கு வர இருக்கிறார்கள். அவர்கள் எம்வீட்டுக்கு வர நாம் கொடுத்து வைக்க வேண்டும்.'' என்று ஹகீம் கூறிக் கொண்டே ஆடைகளை தெரிவு செய்து எடுத்துக் கொள்கிறான்.

அனைத்தையும் வாங்கிவிட்டு வர சுமார் மத்தியானம் 1.00 மணி இருக்கும். வீட்டுக்கு வந்து சற்று களைப்பாறவே கதவு தட்டும் சத்தம் கேட்கிறது. விருந்தினரை எதிர்பார்த்து காத்திருந்த சலீம் ஓடிப்போய் கதவை திறக்கிறான். அங்கே அவன் கண்ட காட்சியை அவன் கண்களாலே நம்பவே முடியவில்லை. மீண்டும் கண்களை கசக்கி பார்க்கிறான். ஆம் ஒருவித குழப்பமுமில்லை. அவனேதான்... சலீமின் உற்ற உயிர்த்தோழன் காசிமும் அவன் குடும்பமும் அங்கே காட்சியளிக்கிறது. இடையில் சலீமா குறுக்கிட்டு அனைவரையும் வரவழைக்கிறாள். சற்றும் இதை எதிர்பார்க்கா சலீம் தன் உயிர்த்தோழனை ஆரத்தழுவுகிறான்.

தொடர்ந்து, வானொலியிலும் இஸ்லாமிய கீதம் கேட்கிறது. ஹஜ்ஜுப் பெருநாள் வந்த சரித்திரம் கேளுங்கள்... நபி இப்ராஹிம் நபி செய்த தியாகங்கள் புரிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையின் எதிர்காலம் தொழிநுட்ப யுகமே!



✍ வ. முஹம்மத் நபீல்

"எவ்வித தொழிநுட்ப சாதனமுமின்றி எமது முன்னோர் எத்தனையோ வெற்றிகள் பெற்றிருக்க, அனைத்துவித தொழிநுட்ப சாதனங்களையும் பெற்றிருக்கும் எம்மால் அதை விட பன்மடங்கு சாதிக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை" என்ற உறுதியுடன் தனது சாதனைப் பயணத்தை ஆரம்பித் திருக்கிறார் றுஹுனு பல்கலைக்கழக சாதனையாளர் அஜ்மல். அவருடன் மேற்கொண்ட உரையாடலை அகரம் வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

**அகரம்:** உங்களைப் பற்றி சில வார்த்தைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

**ஏ.ஏ. அஜ்மல்:** நான் குருணாகல் மாவட்டத்தின் பரகஹாதெனிய பகுதியைச் சேர்ந்தவன். தந்தை அப்துல் அஸீஸ் ஒரு வர்த்தகர். தாய் ரமீஸா இல்லத்தரசி. எனது வெற்றிகளின் அத்திவாரமாக இருப்பவர்கள் அவர்கள்தான். நான் சாதாரண தரம் வரை பரகஹாதெனிய தேசிய பாடசாலையிலும் உயர் தரத்தை குருணாகல் புனித அன்னா கல்லூரியிலும் (st. Anne's College) பூர்த்தி செய்து றுஹுனு பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப் பட்டுள்ளேன். தற்போது Electronical and Engineering என்ற பிரிவில் மூன்றாம் ஆண்டு மாணவனாக கற்றுக் கொண்டிருக் கின்றேன்.

**அகரம்:** உங்களது கண்டுபிடிப்புக்களை அகரம் வாசகர்களுக்காக அறிமுகம் செய்ய முடியுமா?

**ஏ.ஏ. அஜ்மல்:** எமது வீட்டில் முக்கியமான ஆவணங் களைப் பாதுகாக்க அலுமாரியொன்று இருப்பதைப் போல online தரவுகள் மற்றும் கணினிமயப்படுத் தப்பட்ட தரவுகளை பாதுகாக்க நிறுவனங்களில் அமைந்திருக்கும் பாதுகாப்பு அறையே server room எனப்படும். கைத்தொலைபேசி மூலம் server room ஐ கட்டுப்படுத்தக்கூடிய Smart server room monitoring and controlling system என்பதே எனது முதல் கண்டுபிடிப்பாகும். கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி BMICH இல் நடைபெற்ற தேசிய புத்தாக்குநர் தினத்தின் போது எனது கருவி தேசியமட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

அதாவது, இந்தக் கருவி மூலம் server room இற்கு முழுமையான பாதுகாப்பை தொலைபேசி மூலம் வழங்கக்கூடியதாக இருக்கும். நாம் எங்கிருந்த போதும் server room யின் எந்தவொரு கருவியும் smart phone மூலம் கட்டுப்படுத்தக் கூடியதாக இருப்பதுடன் server room இல் உள்ள A/C யில் ஏதாவது கோளாறுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டால் Smart phone இற்கு Real time notification பெறக்கூடியதாக இருக்கும்.

அத்துடன், server room இல் தீ விபத்து ஏற்படல், இனந்தெரியாத நபர் நுழைதல் மற்றும் கதவு முறையாக மூடப்படாதிருத்தல் போன்ற நிலைமைகளின்போது எமது smart phoneக்கு Real time notification வருவதுடன் அங்கு alarm ஒலிக்கக்கூடிய அமைப்பும் இதில் காணப்படுகிறது.

அத்துடன், எனது அடுத்த கண்டுபிடிப்பானது Intelligent Security system ஆகும். Open cashier கொண்ட வியாபார நிலையங்களில் உரிமையாளர் தவிர்ந்த ஏனைய இனந்தெரியாத நபர்கள் திருட்டுத் தனமாக உள்நுழையும் சந்தர்ப்பங்களில் வியாபார நிலையத்தில் alarm ஒலிக்கும். அதேபோல, உரிமையாளரின் smart phone இற்கு Real time notification பெறப்படும் வசதியையும் கொண்டுள்ளது.

**அகரம்**: இந்த பாதையில் நீங்கள் கண்ட அடைவுகளைக் கூற முடியுமா?

**ஏ.ஏ. அஜ்மல்**: எனது இவ்விரு கண்டுபிடிப்புக் களுக்கும் றுஹுனு பல்கலைக்கழகத்தில் சிறப்பு விருது கிடைக்கப் பெற்றது. Robotics துறையில் நான் மேற்கொண்ட ஆய்வு IEEE சர்வதேச சங்கத்தால் தெரிவு செய்யப்பட்டு, இவ்வருடம் தாய்லாந்தில் நடைபெற்ற மாநாட்டில் எனது ஆய்வை சமர்ப்பிக்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளேன்.

அத்துடன், 2014, 2015 ஆண்டு உயர்தர வினாப் பத்திரங்களுக்கான chemistry MCQ விளக்கவுரை நூல்களை எனது நண்பருடன் இணைந்து வெளியிட்டதுடன் 2016ஆம் ஆண்டுக்கான எனது chemistry MCQ நூலும் வெளிவர இருக்கின்றது, இன்ஷா அல்லாஹ்.

**அகரம்**: உங்களது எதிர்கால இலக்கை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

**ஏ.ஏ. அஜ்மல்**: பல்கலைக்கழக படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் உயர் கல்விக்காக வெளிநாட்டுக்கு செல்ல வேண்டும். அதேபோல, மானுடத்துக்கு உதவக் கூடிய இன்னும் நிறைய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

சொந்த நிறுவனமொன்றை நிர்மாணிப்பதன் மூலம் இவற்றை எம் நாட்டு மக்களுக்கு வழங்கி பணியாற்றுவதே என் பிரதான இலக்கு. இந்த செயற்திட்டத்தின் வெற்றிக்கு பல உதவிகளும் தேவைப்படுகின்றன. என் இதயத்தில் ஊற்றெடுக்கும் பல இலட்சியக் கனவுகளை இறைவன் துணையுடன் சாதிப்பதில் ஆவலாக உள்ளேன்.

**அகரம்**: யாருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளீர்கள்?

**ஏ.ஏ. அஜ்மல்**: அளவற்ற அருளாளனை விட அன்புக்கும் நன்றிக்கும் அதிகம் உரித்தானவர் யார்? அத்தோடு, என் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் சகோதரரர்களுக்கும் சகோதரிக்கும் நல் உள்ளங்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அகரம்**: இந்த பொழுதில் நீங்கள் இளைய தலைமுறைக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**ஏ.ஏ. அஜ்மல்**: சாதிக்க வேண்டும் என ஆசையுள்ளவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் தளர்ந்துவிட மாட்டார்கள். எந்தவொரு விமர்சனமும் அவர்களை வீழ்த்தி விடாது.

அத்துடன், அல்லாஹ் எமக்கு அமானிதமாக தந்த நேரத்தையும் அறிவையும் வீண் கேளிக்கைகளில் விரயமாக்காமல் அவற்றை முறையாக பயன்படுத்தி சமூக வளர்ச்சியில் எம்மால் முடிந்த பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற குறிக்கோள் ஒவ்வோர் உள்ளத்திலும் உறுதியாக இருக்க வேண்டும். எவ்வித தொழிநுட்ப சாதனமுமின்றி எமது முன்னோர் எத்தனையோ வெற்றிகள் பெற்றிருக்க, அனைத்துவித தொழிநுட்ப சாதனங்களையும் பெற்றிருக்கும் எம்மால் அதைவிட பன்மடங்கு சாதிக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இன்றைய இளைய தலைமுறையினரின் மிகப் பெரும் தடைக்கல்லாக இருக்கும் தொழிநுட்பத்தை ஆக்கபூர்வமான தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவேன் என எல்லோரும் சபதம் எடுத்துக் கொண்டால் நீங்களும் உலகம் பேசும் ஒருவராக மாறும் நாள் வெகுதூரம் இல்லை.

இனிவரும் இலங்கையை வளப்படுத்த தொழிநுட்ப ஆற்றல் அவசியமாகும். இலங்கையின் எதிர்காலம் தொழிநுட்ப யுகமே. அதுவே, எமக்கான அழகிய எதிர்காலமொன்றை உருவாக்கித் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் ஜெயிக்கலாம்

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology



நாம் வாழும் தற்போதைய சூழல் மிகவும் போட்டி நிறைந்ததும் சவால்கள் மிக்கதுமாகும். சவால்களைச் சமாளித்து போட்டியில் வெற்றி பெறுவதற்கான அத்தனை வழிகளும் எமக்குள்ளேயும் எம்மைச் சூழவும் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றைத் தம்வசமாக்கிச் சாதிக்கத் துணிந்தவர்களே வெற்றியாளர்களாக மாறுகின்றனர்.

அவ்வாறு வெற்றிச் சாதனை படைக்க 8 விதிமுறைகள் காணப்படுகின்றன.

1. உங்களுடைய பலவீனங்களை பலமாக மாற்றுங்கள் (Make your weakness your strength)
2. முயற்சியை ஒருபோதும் கைவிடாதீர்கள் (Never give up the effort)
3. திறன்களை விருத்தி செய்து கொள்ளுங்கள் (Develop your skills)
4. ஒவ்வொரு விடயத்தையும் மனதில் வைத்திருங்கள் (Keep everything in your mind)
5. எவ்வளவு கடினமாக உழைக்கின்றீர்களோ அவ்வளவுக்கு அதிஷ்டசாலிகளாக மாறுவீர்கள்
(The Harder you work the luckier you get)
6. உங்களுடைய சொந்த ஊக்கத்தில் செயற்படுங்கள் (Depend on your own motivation)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. வாழ்க்கையில் ரிஸ்க் எடுங்கள் (Take risk in life)

8. ஓர் இலக்கை அடைந்தால் புதிய இலக்குகளை வகுத்துச் செயற்படுங்கள் (Don't settle; make new goals)

இவை ஒவ்வொன்றையும் விரிவாக நோக்கலாம்.

01. உங்களுடைய பலவீனங்களை பலமாக மாற்றுங்கள்

1988 ஆம் ஆண்டு இந்தியா உத்தரப் பிரதேசத்தின் அம்பேத்கர் நகரில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த அருணிமா சின்ஹா என்பவரின் வாழ்க்கையையே மாற்றிப்போட்ட கதையை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

அருணிமா கரப்பந்து விளையாட்டில் தேசியளவில் பேர் போன ஒரு வீராங்கனை. பட்டமேற்படிப்பை முடித்த பின் சட்டமும் படித்தார். நீண்ட காலம் தொழில் வாய்ப்பில்லாமல் இருந்த அருணிமா, தனது தொழில் நிமித்தமாக டெல்லி வரைக்கும் செல்ல வேண்டி ஏற்பட்டது.

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி ரயிலில் ஏறி தனியாளாக டெல்லிக்குப் பயணமானார். அந்த ரயிலில் கழிவறையில் கூட இடமில்லாத அளவு பெரும் கூட்டம். அந்தப் பெண்ணை ஏராளமான பார்வைகள் குத்திக் கிழித்தன. எப்படியோ ஒடுங்கி உட்காந்திருந்த அருணிமாவின் கையில் செல்போன், சான்றிதழ்கள் அடங்கிய பை, முதுகில் சற்றே பெரிய பை, கழுத்தில் அம்மா ஆசையுடன் பரிசாக அளித்த தங்கச் சங்கிலி. தூங்க இயலாத அந்தப் பயணத்தின் நடுவில்தான் நான்கைந்து முரடர்கள் அருணிவைச் சூழ்ந்து, கழுத்துச் செயினைப் பிடுங்க முயன்றனர்.

அதிலிருந்து தன்னையும் தனது உடைமைகளையும் பாதுகாக்க விட்டுக்கொடுக்காமல் போராடினார் அருணிமா. அந்த முரடர்கள் அவளைத் தாக்கி சங்கிலியைப் பறித்தனர். கண்ணீருடன் அருணிமா எதிர்க்க, அவர்களுள் ஒருவன் ஓங்கி உதைத்தான். ரயில் பெட்டியின் கதவுக் கைப்பிடியைப் பிடித்துச் சமாளிக்க இன்னுமொரு பலமான உதை அருணிமாவுக்கு விழுந்தது

தடக் தடக் தடக்...

அருணிமா ஓடும் ரயிலிலிருந்து வெளியே விழுந்தார். அதே சமயத்தில் பக்கத்துத் தண்டவாளத்தில் எதிர்த் திசையில் ஒரு ரயில் வேகமாகக் கடந்து கொண்டிருக்க, அருணிமாவின் உடல் அந்த ரயிலின் மீது மோதி, அதே வேகத்தில் தூக்கி எறியப்பட்டாள். அந்த நள்ளிரவுப் பொழுதில் சில நொடிகள் அதிர்ச்சியில் அசைவற்றுக் கிடந்த அருணிமா, ''தடக் தடக் தடக் தடக் தடக் தடக்'' என இன்னொரு ரயிலின் சத்தத்தையும், தான் விழுந்து கிடந்த தண்ட வாளத்தில் அதிர்வையும் உணர்ந்தார். அடுத்த ரயில் வெகுவேகமாக அருணிமாவை நோக்கி வந்துகொண்டிருக்க, அவரால் ஒரு இன்ச் கூட நகர முடியவில்லை. அதற்குள் ரயில் நெருங்கிவிட..

கட்ச்ச்ச்...

அருணிமாவின் இடது கால் முட்டுக்கு கீழே கூழாயிருக்க, ரத்தம் பெருக்கெடுக்க கண்ணீருடன் அலறினாள். எங்கிருந்தோ திரண்டு வந்த எலிகள், பிய்ந்த காலின் ரத்தத்தைச் சுவைக்க ஆரம்பித்தன. அவற்றை விரட்ட, தன் கைகளைக் கூட அசைக்கச் சக்தி இல்லாமல் அருணிமா கிடந்தபோது, அடுத்த ரயில் வரும் சப்தம்

தடக் தடக் தடக் தடக்...

இவ்வாறு அன்றிரவு முழுவதும் அத்தண்டவாளத்தில் சென்ற ரயில் வண்டிகள் அக்காலைப் பதம் பார்த்தன. காலையில் அருகிலிருந்த கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் எதேச்சையாக அருணிமாவைக் காண்கிறார். பின்னர் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன் உறவினர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையிலிருந்த அருணிமா பலத்த போராட்டங்களுக்கு மத்தியில் மூன்று வைத்தியசாலைகளில் அறுவைச் சிகிச்சை பெற்றார். அவருடைய இடது பக்க முழங்காலுக்குக் கீழ் உள்ள பகுதி அகற்றப்பட்டிருந்தது. தேசிய அளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பந்து விளையாட்டில் புகழ்பெற்ற அருணிமாவின் கனவுகள் அப்படியே அஸ்த்தமனமாகியிருந்தது.

அருணிமாவின் சகோதரியின் கணவர் ஓர் இராணுவ வீரர். அவருடைய பெயர் ஓம்பிரகாஷ். அருணிமாவின் தந்தை அவர் சின்ன வயதாக இருக்கும்போதே இறந்து விட்டார். அதிலிருந்து அருணிமாவை ஒரு மகளாகக் கருதி வளர்த்தவர்தான் ஓம்பிரகாஷ். அருணிமா எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் போது ஓம் அருணிமாவிடம் கேட்டார் உடல் உறுப்புக்களை இழந்த எந்தவொரு பெண்ணும் இதுவரை எவரெஸ்ட்டை அடைந்தது இல்லை. நீ ஏன் அந்த முதல் பெண்ணாக இருக்கக் கூடாது? அருணிமா ஒரு கணம் யோசித்தார். தனது இருளாகிப்போன கனவுகளை அடைய இது சந்தர்ப்பமாக அமையலாம் என முடிவு செய்தார்.

இங்கு அருணிமா தனது வெற்றிப் பயணத்தில் தனது ஒரு கால் ஊனம் என்ற பலவீனத்தை பலமாக மாற்றுவதை உதாரணமாகக் கூறலாம்.

2. முயற்சியை ஒரு போதும் கைவிடாதீர்கள் (Never give up the effort)

செயற்கைக் கால் தயாராகி அருணிமாவை வந்தடைந்தபோது சந்தோஷமடைந்தாள். ஆனால் அதைப் பொருத்திக் கொண்டு ஓர் அடி கூட நகர முடியவில்லை. மீண்டும் மீண்டும் விழுந்தார். ஆனால் எழுந்தார். சில வாரங்கள் கடும் முயற்சி செய்து, யாரையும் எதையும் பிடிக்காமல் அடிகளை எடுத்து வைத்தபோது மனதால் அருணிமா பறந்து கொண்டிருந்தார்.

வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய பின் ஒரு கெஸ்ட் ஹவுஸில் தங்கவேண்டியிருந்தது. ஐந்தாவது மாடி, லிப்ட் கிடையாது. அருணிமா தத்தித் தத்திப் படிகள் ஏறினார். எவரெஸ்ட் இலட்சியம் நோக்கிய முதல் அடி அது. பின்னர் நண்பர்களின் உதவியுடன் 1984 ஆம் ஆண்டு எவரெஸ்ட்டில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணியான பச்சேந்திரி பாலை நேரில் சந்தித்தார். ''நான் எவரெஸ்ட்டில் ஏறி சாதிக்க விரும்புகிறேன்'' தடுமாற்ற நடையுடன் வந்த அருணிமாவின் வார்த்தைகள், பச்சேந்திரியைச் சிலிர்க்கச் செய்தன. நீ ஏற்கனவே மனதளவில் எவரெஸ்ட்டில் ஏறிவிட்டாய். நிஜத்திலும் ஏறி உலகுக்கு நிரூபிக்க வேண்டும் அவ்வளவுதான்''! வாழ்த்தினார் அவர்.

3. உங்களது திறன்களை விருத்தி செய்து கொள்ளுங்கள் ( Develop your skills)

உத்தர் காசியில் உள்ள டாடா ஸ்டீல் ஃபவுண்டேஷனில் அருணிமாவுக்கு மலையேற்றப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார் பச்சேந்திரி. அங்கே, 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத இறுதியில், அருணிமா மலையேற்றப் பயிற்சியைத் தொடங்கினார்.

சரிவுகளில் நடப்பது, முதல் கடினமான செங்குத்துப் பாறைகளில் கயிற்றைப் பிடித்து தொங்கியபடி ஏறுவது வரையிலான பயிற்சிகள். மாற்றுத்திறனாளி என, பயிற்சியாளர்கள் எந்தக் கரிசனமும் காட்டவில்லை. காரணம் ஏறப்போகும் எவரெஸ்ட்டுக்கு எல்லோரும் ஒன்றுதான். பல்வேறு டிரக்கிங் முயற்சிகளையும் செய்தார் அருணிமா. உள்ளே நம்பிக்கை விஸ்வரூபம் எடுத்தது.

முதுகில் 20 கிலோ வரையிலான சுமையுடன், மலையேற்றக் கருவிகளையும் (கயிறுகள், பனிக்கோடாரி, கம்பு, ஒக்சிஜன் சிலிண்டர் இன்ன பிற பொருட்கள்) எடுத்துக் கொண்டு, தினமும் குறைந்தது 10 கி.மீ மலைப்பாதையில் பயணம். அருணிமா அசரவில்லை அசத்தினார். ''பொறுமை, நிதானம், கவனம், தட்பவெப்பத்துக்கு ஏற்ப உடலைப் பழக்கிக் கொள்ளும் தன்மை, நிலை தடுமாறாத மனம் இவையே மலையேற்ற வீரருக்குத் தேவையான குணங்கள். அதீத தன்னம்பிக்கை ஆபத்தில் கொண்டு விட்டுவிடும். எந்தச் சூழலிலும் மலையேற்றக் குழுத்தலைவரின் கட்டளைகளை மீறவே கூடாது'' - பச்சேந்திரி அத்தியவசிய அறிவுரைகளை வழங்கினார்.

இவ்வாறு தான் மலையேறுவதற்குத் தேவையான திறன்களையும் குணாம்சங்களையும் அருணிமா தன்னகத்துள் விருத்தி செய்து கொண்டார்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இர்ஜென்டீனா
# ARGENTINA




ஸ்பானிய மொழி பேசும் மிகப் பெரிய நாடு அர்ஜென்டீனாவாகும். உலக வங்கிக்குழு, உலக வணிக அமைப்பு போன்ற பொருளியல் அமைப்புக்களின் தொடக்க கால நாடுகளுள் அர்ஜென்டீனா முக்கிய இடத்தை வகிக்கின்றது. அர்ஜென்டீனா என்றவுடன் நமக்கு முதலில் நினைவுக்கு வருவது, அதன் பெருமைமிகு கால்பந்தாட்ட வீரர்கள் மைதானத்தில் நடத்தும் கால்பந்து சாகசங்களாகும்.



ஜனாதிபதி
மவ்ரிஸிஓ மக்ரி



**புவியியல்**

தென் அமெரிக்காவின் தென் பகுதியிலுள்ள அர்ஜென்டீனாவில் பட்டகோனியா என பரந்த சமவெளி பிரதேசமும் இன்னும் பல இயற்கை வளங்களும் கொட்டிக்கிடக்கின்றன. மற்றைய நாடுகளைப் போலல்லாது இங்கு சூடான பிரேஸில் நீரோட்டம் மற்றும் குளிரான போக்லாந்து நீரோட்டம் என இரண்டு நீரோட்டங்கள் கடற்கரையைச் சூழ காணப்படுகின்றன.

**அரசியல்**

இங்கு வெள்ளிமலைகள் இருக்கின்றன என்ற வதந்தியை நம்பி வந்த ஸ்பெயின் ஆக்கிரமிப்பாளர்கள் முதலில் இந்நாட்டை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (அர்ஜென்னோ என்றால் இலத்தீன் மொழியில் வெள்ளி என பொருளாகும்.) தற்போது 22 மாகாணங்களையும் ஒரு தன்னாட்சி நகரையும் உள்ளடக்கி ஒரு சமஷ்டி ஆட்சியாக இது விளங்குகின்றது.

பெரும்பாலும் அர்ஜென்டீனா மக்கள் கிறிஸ்தவ மதத்தையே பின்பற்றுகின்றனர். ரோமன் கத்தோலிக்க பிரிவை பின்பற்றுபவர்களின் அளவு 76.5 ஆக உள்ளது. பொருளாதாரம் கணிசமான அளவு வளர்ந்து வருகின்றது.

*331, 811* கால்பந்தாட்ட வீரர்கள் ஒட்டுமொத்த அர்ஜென்டீனா எங்கும் இருக்கின்றனர். கால்பந்தாட்ட உலகின் முடிசூடா மன்னன் லயனல் மெஸ்ஸி அர்ஜென்டீனா வீரர்தான்.

| | |
|---|---|
| **தலைநகரம்** | **- புவனோஸ் ஐரேஸ்** |
| **ஆட்சி மொழி** | **- ஸ்பானியம்** |
| **ஆட்சி** | **- கூட்டாட்சி குடியரசு** |
| **விடுதலை** | **- மே. 25. 1810** |
| **பரப்பளவு** | **- 27 80 400 ச.கி** |
| **மக்கள்** | **- 3,747, 000** |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **- 333,722 பில்லியன் அமெரிக்க டொலர்** |
| **நாணயம்** | **- பீஸோ** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 25

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்


எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

**கடந்த இதழ் தொடர்...**

## சொல்முறைப்படுத்தல் மென்பொருள் (Microsoft word)

### Numbering:

வரிசை ஒழுங்கில் விடயங்களை முன்வைக் கின்றபோது எண் ஒழுங்குகள் முக்கிய இடம் வகிக் கின்றன. எண்களை சொல்முறை மென்பொருளில் இருத்திக் கொள்வதற்கு பின்வரும் வழிமுறை களைப் பயன்படுத்த முடியும்:




1. தொடர் இலக்கங்களை இடுதல்
2. சிறிய ஆங்கில எழுத்துக்களை இடுதல்
3. பெரிய ஆங்கில எழுத்துக்களை இடுதல்
4. சிறிய, பெரிய உரோமன் இலக்கங்களை இடுதல்

## பாடம் - 20

### வன்பொருட்களை இணைத்தல் (Connecting Hardware....)

கணினி வன்பொருட்கள் தொட்டு உணரக் கூடியவையாகும். அவை மென்பொருட்களை இயக்குவதற்கான தளமாக அமைகின்றன. வன்பொருளை முறைமை அலகு, உள்ளீட்டு வன் பொருள், வெளியீட்டு வன்பொருள் என பிரித்து நோக்க முடியும்.

வன்பொருட்கள் ஒன்றோடொன்று பொருத்தப் படும் போதே அவற்றின் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு பொருத்தப்பட வன் பொருட்கள், பொருத்தப்படவேண்டிய இடங்கள் பற்றி இப்பாடத்தில் கற்போம்.

- ❖ முறைமை அலகில் (system unit) உள்ளடங் குபவை
  - தாய்ப்பலகை (Motherboard)
  - செயலி (processor)
  - வன் தட்டு (hard drive)
  - அழிதகு நினைவகம் (RAM)
- ❖ உள்ளீட்டு சாதனங்கள் (Input Device) Keyboard, Mouse, Trackball, Touch pad, Joysticks, Light pen, Scanners, இன்னும் பல....
- ❖ வெளியீட்டு சாதனங்கள் (Output Devices) Monitor , Printer, Speaker, Light pen, இன்னும் பல....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்பொருட்களை இணைத்தல் (Connecting Hardware....)

| பெயர் (Name) | இணைப்பது (Connected to) |
|---|---|
| Speaker (external) | முறைமை அலகு (The System Unit) The Power supply |
| Keyboard - விசைப்பலகை | முறைமை அலகு |
| Joystick | முறைமை அலகு |
| Printer - அச்சு இயந்திரம் | முறைமை அலகு The Power supply |
| Screen/Monitor/Visual Display Unit (VDU) | முறைமை அலகு |
| Mouse - சுட்டி | முறைமை அலகு |
| Trackball, Touchpad (சுட்டிக்குப் பதிலாக பயன்படுத்துவது) | விசைப்பலகையின் ஒரு பகுதியாக அல்லது முறைமை அலகில் இணைக்கப்படும் |
| Scanner - வருடி | முறைமை அலகு The Power supply |
| Flash Drive - ஒளிப் பேனா | முறைமை அலகு |
| External Hard Dick - வெளிவாரி வன்தட்டு | முறைமை அலகு |



வன்தட்டுக்களை முறைமை அலகுடன் இணைக்கும்போதும், மின்சாரத்துடன் இணைக்கும்போதும் கவனிக்க வேண்டிய சில முக்கிய விடயங்கள் காணப்படுகின்றன.

01. முறைமை அலகுடனும் மின் இணைப்புடனும் இணைக்க வேண்டிய சாதனங்களை முதலில் மின் இணைப்புடன் இணைத்து விட்டு பின்னர் முறைமை அலகுடன் இணைத்தல்.

02. முறைமை அலகுடன் இணைக்கும் சாதனங்களை கவனமாக, நிதானமாக, சரியான பக்கங்களை அவதானித்து இணைத்தல்.

கவனமாக உபகரணங்களை மின்னுடன், முறைமை அலகுடன் இணைப்பதன் ஊடாக மின் கசிவுகளைத் தவிர்க்க முடிவதோடு, உபகரணங்களின் பாவனைக் காலத்தினையும் அதிகரித்துக் கொள்ள முடியும். அத்துடன், பயனரின் எதிர்கொள்ளும் ஆபத்துக்களில் இருந்தும் தவிர்ந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகுகளை விரித்து உயரப் பற..!

நபீல் அபாபீல்



''அப்பாடா விடுமுறை தந்து விட்டார்கள்..!'' ஆனந்தத்துடன் நீங்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவது எமக்கு தெளிவாகக் கேட்கிறது. மீட்டல்கள், பரீட்சைகள் என அதிரடியாக ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த நமது நேரசூசி உதிர்ந்து விழுந்த ஓரிலை போல தனது ஆட்டத்தை நிறுத்தியிருக்கின்றது. ஆசிரியர்களும் பெற்றோரும் எமக்கு மிகப் பெரும் அன்பளிப்பாக ஓய்வைத் தந்திருக்கின்றார்கள். இப்போதுதான் நிம்மதியாக மூச்சு விட முடிகின்றது.

இந்த விடுமுறையில் உங்கள் நான்கு அறைகளுக்குள் சுருங்கிக் கொள்ளத் தேவையில்லை, சற்று வெளியே வரலாம். நேர்த்தியான திட்டமிடலுடன் சின்னச் சின்னதாக சில சுற்றுலாக்கள் சென்று வரலாம்.

பக்கத்துக்கு பக்கம் ஆச்சரியங்களாலும் அபூர்வங்களாலும் நிரம்பிய அற்புத பெட்டகம் இந்த உலகம். எமது ஒவ்வொரு காலடியிலும் ஒவ்வொரு மகத்தான இரகசியத்தை அது புதைத்து வைத்த, இதுவரை எந்தக் கவிஞனாலும் வர்ணிக்கப்படாத, எந்த புகைப்பட கலைஞனாலும் சிறைப்பிடிக்கப்படாத அற்புத அழகு பூமியெங்கும் தாராளமாக கொட்டிக் கிடக்கின்றது. அந்த அதிசயங்களை எப்போது ரசித்து முடிக்கப் போகின்றோம்?

நீங்கள் வானத்தைப் பார்க்க வேண்டாமா? அகன்ற பாலைவனங்களில் ஊர்ந்து செல்லும் ஒட்டகைகளைப் பார்க்க வேண்டாமா? என ஏகன் திருமறையில் தனது படைப்புக்களைப் பார்க்கும்படி கட்டளையிடுகிறான்.

இத்தனை காலங்களாய் ஓர் அறைக்குள் ஒரு பாடத்திட்டத் திற்குள் சுருங்கிக் கொண்டிருந்த நாம், இப்போது சிறகுகள் விரித்து உயரே எழலாம். எட்டுத் திசை யெங்கும் பயணிக்கலாம். வெறுமனே அல்ஹம்துலில்லாஹ் என உச்சரிப்பதற்கும் கற்பனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாற்பட்ட அழகுடனும் நுண்ணிய வடிவமைப்புடனும் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த உலகின் படைப்புக்களைப் பார்த்து ஆன்மா குளிர அல்ஹம்துலில்லாஹ் என ஆழமான அர்த்தத்துடன் உச்சரிப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன.

பூமியின் முளைகளாக நடப்பட்டுள்ள வானம் தொடும் மலைகள் அதனை போர்த்திருக்கும் வெண்புடவைகள் போன்று பனி.

விட்டு விடாமல் விடாப்பிடியாக வீசிக் கொண்டிருக்கும் கடல் அதன் கரைகளில் படிந்திருக்கும் காலடிகள்.

ஓயாத நீர்வீழ்ச்சிகள் சில்லிட வைக்கும் அதன் நீர்த்தாரைகள்.

பசுமையின் அகராதியாக அடர்ந்த வனங்கள்; அவற்றுக்குள் ஆடிப்பாடி குதூகலிக்கும் பெயர் தெரியாப் பறவைகள்.

வாழ்க்கையைப் போன்று வளைந்து நெளிந்து ஓடிக்கொண்டிருக்கும் நதிகள்; அவற்றுக்குள் சின்னச் சின்ன சித்திரப்பூக்களாய் நெளிந்தோடும் குட்டி மீன்கள்.

சின்னச் சின்ன சமுத்திரங்களாக விரிந்திருக்கும் வாவிகள்; அதன் கரைகளில் ஒற்றைக்காலில் உச்சிவானில் ஊஞ்சலை தேடிக்கொண்டிருக்கும் கொக்குகள்.

வழுக்கும் வரப்போரங்களுடன் வடிவு தரும் வயல்வெளிகள்; அதில் வழுக்கி விழும் நவுசர்களை கைகளில் கோர்த்தபடி பட்டம் விடும் பட்டாம்பூச்சிகளாக ஆரவாரம் செய்யும் சிறுவர்கள்.

என வாழ்வில் கண்டு களிக்க வேண்டிய நிறைய அம்சங்கள் இருக்கின்றன. இன்னும் சில காலங்கள் சென்றால் இவையல்லாம் சினிமாவிலும் கவிதைகளிலும் மாத்திரமே பார்க்க கூடியதாக சுருங்கிவிடும். சிறகுகளை கட்டிக் கொண்டு பரந்த உலகத்தைத் தேடி பயணிப்போம்.

சுற்றுலாக்கள் செல்லும்போது அவதானிக்க வேண்டிய சில முக்கிய விடயங்கள் இருக்கின்றன.

- எல்லையற்ற குதூகலமும் நண்பர்களின் சகவாசமும் வரையறையற்ற சுதந்திரமும் சிலவேளை நிதானத்தை இழக்கச் செய்யலாம். அன்றாடம் நடக்கும் வீதி விபத்துக்களில் நாங்கள் படிப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்போதும் நிதானத்துடன் எமது உயிர்களையும் பெற்றோரின் புன்னகையையும் பாது காத்துக் கொள்ள வேண்டும். எப்போதும் அவதானமாக இருப்போம்.
- படைத்தவனை மறந்து விட்டு படைப்புக் களுடன் மாத்திரம் எமது சுற்றுலா அமைவதில் அர்த்தமில்லை. எப்போதும் தொழுகையை கடைப்பிடிப்போம், பிரார்த்தனைகள் செய்வோம்
- இலங்கை பசுமையின் தேசம். களவு போய்க் கொண்டிருக்கும் தேசத்தின் பசுமையை பாதுகாப்பது எமது கடமையாகும். முக்கியமாக நாம் பயன்படுத்திய குப்பைகளை உரிய முறையில் அகற்றுவது தொடர்பாக அதிக கவனம் செலுத்துவோம்.
- எமது சுதந்திரம் அடுத்தவர்களுக்கு இடையூறாக இருக்கக் கூடாது. மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல், தொந்தரவு செய்யாமல் எமது சுற்றுலாக்கள் அமையட்டும்.

அழகான உலகத்தை சுற்றிப் பார்ப்பது போல அற்புதமான உள்ளங்களையும் இந்த விடுறையில் சந்தியுங்கள். உங்களைக் கண்டு கண் குளிரவே இங்கு ஏகப்பட்ட உள்ளங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. சிறு வயதில் உங்களை தோளில் ஏற்றி குதிரைச் சவாரி செய்த உங்கள் தாத்தா-பாட்டிகள், தமிழின் முதல் எழுத்தை கைபிடித்து கற்றுத் தந்த ஆரம்ப கால ஆசிரியர்கள், சிறு வயது நண்பர்கள் என அவர்களின் பட்டியல் மிக நீளமானது.

தமது அனுபவங்களை நமக்கு கற்றுத் தருவதற்காகவே காத்திருக்கின்றார்கள் எமது தாத்தா-பாட்டிகள். அவர்களின் அருகே அமைதியாக அமர்ந்து அவர்களின் கதைகளைக் கேட்கலாம். உலகின் எவ்வளவு பெரிய பேராசிரியராலும் எவ்வளவு புகழ்வாய்ந்த கலைக் களஞ்சியங்களாலும் தர முடியாத அறிவை அவர்களால்தான் தர முடியும். எம் மீது கனிவு கொண்டு, எமக்காக கரமேந்தி அவர்கள் கேட்கும் பிரார்த்தனைக்கு ஆழமான சக்தி உண்டு.

சிறகு விரியுங்கள்

இந்த விடுமுறையில் அழகான உலகத்தையும் அற்புதமான உள்ளங்களையும் தரிசிக்கச் செல்லலாம்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




குட்டிக் கதை

# தவறவிட்ட பரிசு

ஓர் இளைஞன் தனது பட்டப்படிப்பை முடிக்கும் தறுவாயிலிருந்தான். அவன் ஒரு குறிப்பிட்ட ஸ்போர்ட்ஸ் மாடல் காரின் மீது பைத்தியமாய் இருந்தான். அதை எப்படியும் வாங்க வேண்டும் என்று பிடிவாதமாயிருந்தான்.

பட்டப்படிப்பை முடிக்கும்போது அவனுக்கு ஏதாவது பரிசளிக்க வேண்டுமென அவனது தந்தை எண்ணியிருந்தார். தனக்கு அந்தக் கார்தான் வேண்டுமென அவரிடம் தெரியப்படுத்தியிருந்தான். அவரால் அதை வாங்க இயலுமென அவனுக்குத் தெரியும்.

பட்டமளிப்பு விழா அன்று தந்தை அவனை அறைக்குள் அழைத்துச் சென்றார். அவனைப் பற்றி பெருமையாகவும் மகிழ்வாகவும் பேசிய அவர் அவனிடம் ஒரு பரிசுப் பெட்டியை அளித்தார்.

சிறிது ஏமாற்றமடைந்த இளைஞன், காகிதத்தைப் பிரித்துப் பெட்டியைத் திறந்து பார்த்த பொழுது, அதனுள் ஓர் அழகிய தோல் அட்டையுடன் கூடிய தங்க எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பைபிள் புத்தகம் இருந்தது.

கோபமடைந்த அவன், ''இவ்வளவு பணம் இருந்தும் உங்களால் ஒரு பைபிளைத்தான் வாங்கித் தர முடிந்ததா?'' என்று கத்திவிட்டு வீட்டைவிட்டு வெளியேறி விட்டான்.

பல வருடங்கள் கழித்துத் தனது தொழிலில் நன்கு முன்னேறி பணம், புகழ், நல்ல குடும்பம் என்று எல்லாம் அமையப் பெற்ற அவ்விளைஞன், தனது தந்தையைப் பற்றி நினைக்கலானான். அந்தப் பட்டமளிப்பு நாளுக்குப் பிறகு அவரை அவன் சந்திக்கவில்லை.

அவன் அப்படி எண்ணிக் கொண்டிக்கையிலேயே அவனது தந்தை இறந்து விட்டதாகவும் அவரது சொத்துக்கள் யாவும் இவனுக்கு விட்டுச் சென்றிருப்பதாகவும், அவன் உடனே வரவேண்டுமென்றும் ஒரு தந்தி வந்தது.

தனது தந்தையின் வீட்டையடைந்த அவனை வருத்தமும் குற்ற உணர்வும் வாட்டின. தனது தந்தையின் பொருட்களைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களில் தான் அன்று விட்டுச் சென்ற பரிசுப் பொருளான பைபிள் பட்டது. அவன் விட்டுச் சென்றபடியே அது அங்கிருந்தது.

கண்களில் கண்ணீருடன் அதன் பக்கங்களைப் புரட்டினான். அந்த பைபிளிருந்து ஒரு காரின் சாவி கீழே விழுந்தது. அன்று அவன் விரும்பிய அதே காரின் சாவி. பட்டமளிப்பு விழா நாளில் முழுப் பணம் கட்டியதற்கான ரசீதோடு இருந்தது.

நாம் எதிர்பார்க்கும் பரிசுகள் நாம் எதிர்பார்க்கும் வடிவில் இல்லையென்பதற்காக பல முறை நாம் பரிசையே இழந்து விடுகிறோம். நாம் எதிர்பார்த்தது நமக்கு எவ்வளவு அருகாமையில் இருக்கிறது என்று அறியாமலேயே அதைக் கடந்தும் போகின்றோம். பொறுமையுடனும் அமைதியுடனும் வாழ்வை எதிர்கொண்டால் நாம் விரும்பும் எல்லாமே நம்மை வந்தடையும்.

---

# குதிரைகள்

சீனாவின் தென் பகுதியில் ஒரு கிராமத்தில் ஒரு பெரிய செல்வந்தர் தான் இறப்பதற்கு முன் எழுதிய உயிலில் தனது பத்தொன்பது குதிரைகளையும் தனக்குப் பின்னர் எப்படிப் பகிர்ந்தளிக்க வேண்டுமென எழுதியிருந்தார்.

அதில் தனது குதிரைகளில் பாதியை தனது ஒரே மகனுக்கும் நான்கில் ஒரு பகுதியை ஊர் கோயிலுக்கும் ஐந்தில் ஒரு பகுதியை தனது விசுவாசமான வேலைக்காரனுக்கும் பகிர்ந்து தருமாறு எழுதியிருந்தார்.

அவர் இறந்த பிறகு ஊர் பெரியவர்கள் கூடினார்கள். உயிலைப் படித்துக் குழம்பிப் போனார்கள். பத்தொன்பது குதிரைகளை பாதியாகவும் நான்கில் ஒரு பகுதியாகவும் ஐந்தில் ஒரு பகுதியாகவும் எப்படி பிரிப்பது? என்று அறியாமல் திணறினார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த யோசனைக்குப் பின் பக்கத்து ஊரில் இருந்த ஒரு ஞானியிடம் யோசனை கேட்க எண்ணி அவருக்கு சொல்லி அனுப்பினார்கள் அவர் மறுநாள் குதிரையில் வந்தார். உயிலைப் படித்த அவர் உடனே பத்தொன்பது குதிரைகளுடன், தனது குதிரையையும் சேர்ந்து நிற்க வைத்தார். இப்பொழுது மொத்தம் இருபது குதிரைகளாயின.

அதில் பாதியான பத்து குதிரைகளை செல்வந்தின் ஒரே மகனுக்குக் கொடுத்தார். இருபதில் நான்கில் ஒரு பகுதியான நான்கு குதிரைகளை விசுவாசமான வேலைக்காரனுக்கும் கொடுத்தார். மீதமிருந்த தனது குதிரையை எடுத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமானார்.

ஊர் பெரியவர்களும் ஊர் மக்களும் ஞானியின் எளிய ஆனால் அதிசயத்தக்க வழிமுறையைக் கண்டு வியந்து நின்றனர். ஞானி புறப்படுவதற்கு முன்னர் சில முத்தான வார்த்தைகளைக் கூறி விட்டுச் சென்றார்.

அந்த வார்த்தைகள் அவர்கள் நெஞ்சங்களில் ஆழமாகப் பதிந்தன. அவ்வார்த்தைகளை தமக்குப் பிறகு வந்த பல தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்த்தனர். அவர்களும் அதைப் பின்பற்றினார். அந்த ஞானி கூறிய வார்த்தைகள் இவைதான்:

''உங்களது எல்லா சிந்தனைகளிலும் செயலிலும் அன்பை ஒரு பகுதியாகச் சேர்த்து விடுங்கள். பின்னர் எந்த சிந்தனையும் செயலும் எளியதாகவும் இனிமையாகவும் அமைந்து விடும்.''

## நூல் அறிமுகம்




இது வரை நான் வாசித்திராத புத்தகமொன்றை எனக்குத் தருபவனே எனது மிகச்சிறந்த நண்பன் என்றார் ஆபிரஹாம் லிங்கன். அதேபோன்று நமக்கு தேவையான அனைத்து புத்தக பொக்கிஷங்களையும் உள்ளடக்கி தலைநிமிர்ந்து நிற்கின்றது இஸ்லாமிக் புக் ஹவுஸ். ஒரே கூரையின் கீழ் அறிவுச்சிகரங்களான அனைத்து வகை புத்தகங்களையும் பாடசாலை பயற்சி நூல்களையும் பாடசாலை உபகரணங்களையும் மாத்திரமின்றி தனது வெளியீட்டகம் மூலம் காலத்திற்கு காலம் மாணவச்செல்வங்களுக்கு தேவையான புத்தகங்களையும் தொடர்ந்து வெளியிட்டு சாதனை படைத்து வருகின்றது.

அந்த வகையில் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான ''முல்லை மொட்டுக்கள்'' எனும் மாதிரி வினா விடை தொகுப்புக்களை எங்களுக்காக கொண்டு வந்திருக்கின்றது இஸ்லாமிக் புக் ஹவுஸ். மாணவர்களுக்கு தேவையான அனைத்து அரும்பெரும் அறிவுகளை அவர்களை கவரும் விதத்தில் வடிவமைத்து மிகப்பெரும் சாதனையாற்றியுள்ளது. நூலை தொகுத்திருக்கும் ஐ.எல்.எம் ஸபான் (B.A) இத்துறையில் ஆழமான ஈடுபாடும் மிக நீண்டகால அனுபவமும் உடையவர்.

நூல்களை தனித்தனியாக மட்டுமின்றி உங்கள் பாடசாலைக்கு தேவையான அளவு மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
இல. 77 தெமடகொட வீதி,
மருதானை, கொழும்பு 09.

**தொடர்புகளுக்கு:**
**0112 684851, 0772 518641**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைச் சரம்

## இன ஒற்றுமை

இனத்தின் ஒற்றுமை மனதால் இணைவது
சமூகம் உயிர்த்தால் சகலதும் உயிர்க்கும்
சமூகம் இறந்தால் சகலதும் இறக்கும்
தனியே ஒருவன் பனித்துளி போலாவான்
தூசியும் அவனை நாசத்தில் ஆக்கும்
ஒற்றுமை ஒன்றால் பற்றும் நெருப்ப
அனலுக்கு முன்னே அழியும் பர்வதம்

பணத்தை கொண்டு சனத்தை வாங்கலாம்
இனத்தை வாங்க மூலதனம் உதவாது

சாதிச் சண்டை மோதத் தொடங்கின்
பணமொரு குப்பை பிணமும் எதிர்க்கும்
கட்டிக் காத்த பெட்டக மணிகலம்
சொத்தும் சுகமும் பத்திர மெங்கே?
எல்லாம் வீணே நில்லா தெவையும்
அகதி முகாமே அடைக்கல மாகும்!
இன ஒற்றுமையே முனைப்பின் ஜீவன்
பணத்தைக் காக்க இனத்தைப் பேணுதும்

**ஏ.எம். அஸ்பாக்**
**ஜாமிஆ நளீமிய்யா**
**கிண்ணியா - 03**

## காலநிலை மாற்றம்

தோழனே!
இப்பொழுதெல்லாம் முன்போலில்லை...
நிறையவே
புதிராகத்தான் இருக்கின்றன

சுயநலத்துக்காய் மாறிக் கொள்ளும்
சில மனங்களைப் போல
காலமும்
தன்னில் அடிக்கடி நிலை மாறுகின்றது

தோழனே...!
வாழ்க்கையை வாழ
அசத்தல்கள் வேண்டும்...
உலகினை பார்க்க
ரசனைகள் வேண்டும்...
உணர்வுகள் தென்படைய
திறந்த மனம் வேண்டும்...
கவிதைகள் எழுத
கனவுகள் வேண்டும்...
இத்தனைக்கும்
காலம் ராகமிசைக்க வேண்டும்

மழையில் நனைந்து, தெப்பலாகி
இன்பற்ற காலங்கள் மாறி
என்னவோ - இன்று
வியர்வையில் மூழ்கி விடுகின்றோம்

மழையை எதிர்பார்க்கும்
வயல் மன்னனின்
மனம் கூட - வரண்டுதான் இருக்கிறது
இவ்வாறிருக்க
வெடித்துக் காணும் நிலங்களில்
ஆச்சரியம் எதுண்டு?
அறுவடைக்காய் காத்திருக்கும் நாளொன்றில்
ஒரேயடியாய் கொட்டிவிட்டுச் செல்லும்
அடைமழையில் என்ன பயனுண்டு?

தோழனே...!
மானிடம் செய்யும் தவறால்
மற்ற ஜீவன்களுக்கும்தானே அழிவு!
காலநிலை - அது
முன்போலில்லை
மாறிவிட்டது

**அஸ்ஹஸன் ஸாஹிர்**
**தஸ்கர**

## பேசும் கவிதை - இல 31



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.


**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 டிசம்பர் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் கவிதை - இல 29



## முதலிடம் பெற்ற கவிதை

### ஆசானே!

துப்பாக்கி ஏந்தாமல்
வெண்கட்டி ஏந்துகிறீர்
ஒருவகையில் நீங்களும்
போராளிகள்தான் - நீங்கள்
சமூகத்தின் இருளகற்றும்
விடுதலை வீரர்கள்

**ஷிம்லா குல்தூம் ஹம்ஸா**
**இந்திரிவிகொட**
**மக்கொன**

### சிறந்த இதயம்

சுயநலம் என துடிக்கும்
இதயங்கள் மத்தியில்
பொதுநலம் என துடிக்கும்
இவ் இதயத்தை
போற்றுக நல் மனதுடன்
என்றும் இவ் இதயங்கள்
துடித்திட!

**எம்.எப்.எம். பஸ்ரத்**
**அலியாவெடுனுவெவ**
**கல்கமுவ**

### ஆசான்!

எழுத்துக்கள் எழுந்து நடப்பதற்கு
உறுதுணை உங்கள் விரல்கள்
புத்தகங்கள் தங்கள் வரலாற்றை
வெளிப்படுத்துவதற்கு ஊடகம்
உங்கள் வார்த்தைகள்
துடுப்பில்லாத படகும்
நல்ல ஆசிரியர்கள் இல்லாத
பாடசாலைகளும் ஒன்றே...
உங்களால் அழகாகிய மாணவர்
அறிவு அறிவுரையால் மேலும்
மெருகூட்டப்படுகிறது

**எப்.எப். பரீஜா**
**தில்லையடி**
**புத்தளம்**

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### ஆசான்!

உயிரின்றி உறவின்றி
நிழலின்றி நிலையின்றி
இரவின்றி பகலின்றி
மாணவர்களுக்காக தவிக்கின்ற
ஆசானே!
என்றும் நலமுடன் வாழ்ந்திடுவீர்!

**ஆர்.எம். ரிஜ்வான்**
**அலியாவெடுனுவெவ**
**கல்கமுவ**

### கல்வி தந்த ஆசானே!

கல்விக்கண்ணைத் திறந்து
கற்பூரத்தை வீசி
'அ' என்ற எழுத்தை
அமிர்தமாய் சொல்லி
அறிவியலில் நுழைய
வழிவகுத்த குருவே!
அன்பையும் நீர் உணர்த்தி
பண்பையும் நீர் விதைத்து
ஒழுக்கத்தை உணர்வாக்கினாயே!
நீர் என்றும் வாழ்க!

**ஏ.எப். வஹிபா**
**ஏறாவூர் - 03**

### பேரற்புதமே!

பாரினில் இருள் போக்கும்
திங்கள் அற்புதமானால்
மானிடரின் அறியாமையை
போக்கும் நீர்
பேரற்புதமே!

**எம்.எப். பஸீரா பேகம்**
**அலியாவெடுனுவெவ**
**கல்கமுவ**

### ஆசான்

ஆசானின் அடைக்கலம்
அவனியை அழகாக்கும்
எண்கணிதம் கற்பித்தீர்
எண்ணங்கள் வளர்ந்திடவே!
புன்னகையை உதிர்த்திட்டீர்
பூவுலகை வென்றிடவே!

**எம்.என்.எம். நபாத் நபீல்**
**கு/கிரி/மதீனா தே.பா.**
**சியம்பலாகஸ்கொடுவ**

### ஆசானே!

வெண்கட்டி கொண்டு
எம்மை எமக்கே அறிமுகம்
செய்த ஆசானே!
எம் அறிவுக் கண்களை
திறக்க வைத்தீர்
அன்பாலே எம்மை வென்றீர்...
ஏணியாய் நீர் நின்றீர்...
கலையெல்லாம் உம்மிடம்
நாம் கற்றோம்...

**ஸாகிரா ஸமான்**
**ஏதன்டவெல**
**வெவகம**

### ஆசானே

ஆசானே!
வெற்றிக்கு வழிகாட்டி நீ!
நல்லொழுக்கங்களை
கற்றுத் தருவதும் நீ!
இந்த உலகில்
நல்ல பிரஜையாக
வாழ வேண்டும்
என்று இறைவனிடம்
பிரார்த்திக்கின்றேன்

**எம்.எஸ்.எப். சபா**
**பாத்திமா ஸஹ்றா பெ.அ.க.**
**ஓட்டமாவடி**

### சிற்பிகள்

சிறுபராயம் முதல்
எமக்கு
எழுத்தையும் வாசிப்பையும்
ஒழுக்கத்தையும் விழுப்பத்தையும்
ஊட்டி பயில வைத்த
ஆசானே
நாளாந்தம் கௌரவிப்போம்

**அஸ்மா இக்ராம்**
**பலந்தை மு.வி.**

### ஆசிரியர் பணி

உலகின் உயர்வுக்கு
உன்னத
மாணவர்கள்
உயிராகி உருவாக்கி
தலை சிறந்து மிளிர
உடலாலும்
உள்ளத்தாலும்
உதவி நிற்கும்
உன்னத தொழிலே...
ஆசிரியர் தொழிலே...

**எம்.ஐ.எப். இஸ்ரா**
**பலந்தை மு.வி.**
**அகலவத்த**

### வழிகாட்டி

கல்விச் சோலையிலே
முன்னேறி முயன்று
சிகரம் தொட்டு தொடர்
சாதனை படைக்க
முன்னின்று வழிகாட்டும்
உம் பணியை
கவிமலையில் செதுக்கிட
வார்த்தையில்லயே!!

**அஸ்மா மஸாஹிம்**
**அல் பஹ்ரியா ம.க.**
**தொட்டவத்தை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அகரம் ஸ்போர்ட்ஸ்



விரைவு - உயர்வு - துணிவு

# ஜல்லூயிஜி புபான் ஓய்வு




ரஷ்யாவில் 2018 ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள உதைப் பந்தாட்ட உலகக் கிண்ணத்துக் கான தகுதிப் போட்டியில் சுவீடனிடம் தோல்வியடைந்து, உலகக் கிண்ணத்துக்கு இத்தாலி தகுதி பெறாமையைத் தொடர்ந்து, இத்தாலி அணியின் தலைவரும் கோல் காப்பாளருமான ஜல்லூயிஜி புபான் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். 39 வயதான ஜல்லூயிஜி புபான் 1997 ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு எதிராக சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டு, 20 ஆண்டுகளுக்கு மேலாக விளையாடும் காலத்தில் 175 போட்டி களில் இத்தாலியை பிரதிநிதித்துவப்படுத்தியதோடு 2006ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தையும் வென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்திய பெண்கள் ஹொக்கி அணி வெற்றி




இந்திய பெண்கள் ஹொக்கி அணி சீனாவை வீழ்த்தி 2017 ஆம் ஆண்டிற்கான மகளிர் ஆசிய கோப்பையை கைப்பற்றி சாதனை படைத்தது. இந்தப் போட்டி ஜப்பானின் காகமிகாஹரா காவாஸகி மைதானத்தில் கடந்த மாதம் நடை பெற்றது. ஏறத்தாழ 13 ஆண்டுகளுக்குப் பின் இந்த கோப்பையை மீண்டும் இந்திய மகளிர் ஹொக்கி அணி கைப்பற்றி உள்ளமை விசேட அம்சமாகும்.

# உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெறத் தவறியது இத்தாலி



21 ஆவது உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டித் தொடர் 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் இடம்பெற இருக்கிறது. நான்கு தடவைகள் உதைப்பந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்ற இத்தாலி, 1958ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற் தடவையாக, ரஷ்யாவில் அடுத்தாண்டு இடம் பெறவுள்ள உலகக் கிண்ணத்துக்கு தகுதிபெறத் தவறியுள்ளளமை விளையாட்டு ரசிகர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. 1930ஆம் ஆண்டு இடம்பெற்ற முதலாவது உலகக் கிண் ணத்தில் பங்குபற்ற மறுத்திருந்த இத்தாலி, தமது வரலாற்றில் இரண்டாவது தடவையாக உலகக் கிண்ணத்துக்கு தகுதிபெறத் தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 1934, 1938, 1982, 2006 ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை இத்தாலி சுவீகரித்தது. அத்தோடு, 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற்தடவையாக உலகக் கிண்ணத்துக்கு சுவீடன் தகுதிபெற்றுள்ளது. 2018 ஜூன் 14 ஆம் திகதி உலக கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Whitewash
## என்றால் என்ன

வெள்ளையடிப்பு (Whitewash) என்பது பெரும் பாலும் விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகும். ஒரு விளையாட்டிலோ அல்லது விளையாட்டுத் தொடரிலோ விளையாடும் ஓர் குறித்த அணியானது எதிர் அணியினை எந்தவித புள்ளிகளும் எடுக்கவிடாமல் அல்லது எந்தவொரு விளையாட்டிலும் வெற்றியடைய விடாமல் செய்து தோற்கடித்தலை இப்பதம் குறிக்கின்றது. பொதுவாக ஐக்கிய அமெரிக்காவில் இப்பதத்திற்குப் பதில் shut out எனும் பதமே பரவலாக பயன்படுத் தப்படுகின்றது. பேஸ்பால், கால்பந்து போன்ற விளையாட்டுக்களில் வெள்ளையடிப்பு எனும் பதம் பயன்படுத்தப்படுவதில்லை. கால்பந்தில் clean sheet எனும் பதம் பயன்படுத்தப்படுகிறது. கிரிக்கெட் உட்பட துடுப்பாட்டங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டப் போட்டிகளைக் கொண்ட துடுப்பாட்டத்தொடர் ஒன்றில் எதிர ணியை முழுமையாக தோல்வியடையச் செய்யும் போது இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இச் சொல் அண்மைக்காலமாக கிரிக்கெட் விளை யாட்டில் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்.



## உங்களுக்குத் தெரியுமா?

- முப்பது செக்கன்களுக்குள் முடியும் விளையாட்டு சுமோ ஆகும்.
- சதுரங்க விளையாட்டின் தாயகம் இந்தியா ஆகும்.
- கயிறு இழுத்தல் போட்டி முதன் முதல் சீனாவிலேயே ஆரம்பமானது.
- உலகின் மிகப் பழமையான விளையாட்டு நீச்சல் ஆகும்.
- மல்யுத்த சண்டையின் அதிகூடிய நேரம் 12 நிமிடங்கள் ஆகும்.




## உடலில் அனைத்து உறுப்புக்களையும் இயக்கும் விளையாட்டு

கூடைப்பந்தாட்டம் (Basketball) சுமார் 200 நாடுகளில் ஆர்வத்துடன் விளையாடப்படுகிறது. இது மிக வேகமான, சில வினாடிகளுக்குள் ஆடுகளத்தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு சென்று திரும்பக்கூடிய ஆட்டம். உடலின் அனைத்து உறுப்புக்களையும் பயன் படுத்தும் வண்ணம் இந்த விளையாட்டு வடிவ மைக்கப்பட்டுள்ளது. இது எமது உடல், உள விருத்திக்கு ஆரோக்கியத்தை தரும் முக்கிய மானதோர் விளையாட்டாகும்.

## உலக ஊக்கமருந்து தடுப்பு ஆணையம்

WORLD ANTI-DOPING AGENCY

ஊக்க மருந்து இல்லாத விளையாட்டு உலகை உருவாக்க வேண்டியதை நோக்காகக் கொண்டு பன்னாட்டு ஒலிம்பிக் குழுவின் தலைமையில் செயல்பட்டு வரும் விளையாட்டுத்துறையோடு சார்ந்த ஓர் அமைப்பே இதுவாகும். இவ்வமைப்பு 1999 நவம்பர் 10 இல் சுவிட்சர்லாந்து, லோசான் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு முதல் இவ்வமைப்பின் தலைமையகம் கனடாவின் மொண்ட்ரியல் நகரத்தில் இயங்கி வருகின்றது. லோசான் அலுவலகம் ஐரோப்பாவின் பிராந்திய அலுவலகமாக இயங்கி வருகிறது. இவற்றை விட ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய பகுதிகளிலும் பிராந்திய அலுவலகங்கள் செயற்படுகிறது. இது தொடர்பான மேலதிக விடயங்களை பின்வரும் உத்தியோகபூர்வ இணை யதளத்தில் காணலாம். www.wada-ama.org/en/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



**நேரம் 45 நிமிடம்**



**வினாப்பத்திரம் I**



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

**பின்வரும் வினாக்களில் ஓர் உரு ஏனைய இரண்டு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.**

1\.

i.  ii.  iii. 

2\.

i.  ii.  iii. 

**தரப்பட்டுள்ள கூட்டங்களில் சேராதது எது?**

3\. கிலோ கிராம், லீற்றர், கிலோ மீற்றர், கிராம், சென்றி மீற்றர், மீற்றர்

i. மீற்றர் ii. லீற்றர்
iii. கிராம்

4\. ஜனவரி, மார்ச், ஏப்ரல், மே, அகஸ்ட், நவம்பர்

i. ஜூன் ii. ஏப்ரல்
iii. ஆகஸ்ட்


5\. பின்வரும் அட்டவணையில் உள்ளவர்களில் வயது குறைந்தவரையும் வயது கூடியவரையும் தெரிவு செய்க?


| பெயர் | பிறந்த திகதி |
|---|---|
| பாரதி | 2010.06.27 |
| குமார் | 2012.02.22 |
| பவாஸ் | 2010.05.25 |
| பாத்திமா | 2012.01.10 |


i. பாரதி, பாத்திமா
ii. குமார், பவாஸ்
iii. பாத்திமா, குமார்

**கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**

6\.





i. 7 ii. 1 iii.2

7\. முதல் 25 வரையுள்ள எல்லா இரட்டை எண்களையும் எழுதும்போது இலக்கம் 2 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?


i. 7 ii. 8 iii. 6

8\. வெற்றிடத்திற்கு வரவேண்டிய பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.


| | | | |
|---|---|---|---|
| 5 | 10 | 15 | 20 |
| 40 | ... | 30 | 25 |
| 45 | ... | ... | 60 |
| 80 | 75 | 70 | 65 |



i.




ii.



iii.


i. 20,55,60 ii. 35,50,45
iii. 35,50,55

9\. மூன்று சம சதுரங்களை ஒரே நிரையில் வைத்து தயார் செய்யப்பட்ட செவ்வகத்தின் சுற்றளவு 40 cm ஆகும். ஒரு சதுரத்தின் பரப்பளவு எத்தனை சதுர மீற்றர்?



i. 30 ii. 40
iii. 25

10\. A,B,C,D நான்கு குழுக்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைகள் இவ்வுருவில் குறிக்கப்பட்டுள்ளன.




குழு B இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 24 ஆகும். இதற்கு ஏற்ப A யில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

i. 72 ii. 96 iii. 80


11\. ○×□ 40 ஆகவும் ○−□ 6 ஆகவும் ○+□ இருப்பின் இன் பெருமானம் யாது?

i. 14 ii. 16 iii. 12

12\. இரு வெற்றுக் கட்டங்களுக்கு பொருத்தமான இரு கணித செய்கைகளையும் முறையே தெரிவு செய்க. 64 □ 4 = 4 □ 4

i. ×,÷ ii. ÷,× iii. +,-

13\.




இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

i. 5 ii. 4 iii. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பின்வரும் உருக்களில் கூடுதலாக உள்ள செங்கோணம் உள்ள உரு எது?




i. 1 ii. 2 iii. 3

15. பேருந்து ஒன்று 11.45 மணிக்கு கண்டியில் இருந்து புறப்பட்டு, 13:10 மணிக்கு கொழும்பை வந்தடைந்தது. பயணத்திற்கு செலவிட்ட காலம் எவ்வளவு?

16. கொழும்பை வந்தடைந்த நேரத்தை முற்பகல், பிற்பகல் என எழுதுக.

**பின்வரும் நேரத்தை இருபத்தி நான்கு மணித் தியால கடிகாரத்தில் காட்டும் முறையில் இலக்கங் களில் எழுதுக.**

17. பிற்பகல் ஒன்பது கழித்து இருபத்து ஐந்து நிமிடம்

18. முற்பகல் பத்திற்கு நாற்பத்தைந்து நிமிடம்

19. மிகப் பெரிய எண்ணின் கீழ் கீறிடுக.

i. 3.1 ii. 3 02
iii. 3.011 iv. 3.033

20. மிகச் சிறிய எண்ணின் கீழ் கீறிடுக.

i. 2.21 ii. 2.01
iii. 2.7 iv. 2.2

21. வடக்கு திசைக்கும் மேற்கு திசைக்கும் இடையில் உள்ள திசை எது?

i. கிழக்கு ii. வடமேற்கு
iii. தென்மேற்கு

**மூன்று சொற்கள் ஒரு பொருள் தரக்கூடியன ஒன்று வித்தியாசமானது அதனை கோடிடுக.**

22. i. மேனி ii. விரல்
iii. யாக்கை iv. சரீரம்

23. i. பனுவல் ii. வரலாறு
iii. ஏடு iv. புத்தகம்

24. i. துயில் ii. உறக்கம்
iii. நித்திரை iv. நேத்திரம்

25. i. மனம் ii. மணம்
iii. சுகந்தம் iv. நாற்றம்

26. i. ஆகாரம் ii. உண்டி
iii. எண்ணம் iv. போசனம்

**பின்வரும் மரபுகளுக்கு இரு பிராணிகளைக் குறிப்பிடுக.**

கத்தும் 27. ................ 20. ................

சீறும் 29. ................ 30. ................

**கீழே காணப்படும் வாக்கியங்களை ஒழுங்கமைத்து கட்டத்தினுள் இலக்கமிடுக.**

31.

i. மாணவர்கள் காலைக்கூட்டத்திற்கு விரைந்து சென்றனர் ( )

ii. அதிபர் உரை நிகழ்த்தினார் ( )

iii. காலைப் பிரார்த்தனை நடைபெற்றது ( )

iv. மாணவர்கள் வகுப்பறைக்குத் திரும்பினர் ( )

v. காலைக்கூட்டத்துக்கான மணி ஒலிக்கப்பட்டது ( )

**பின்வரும் சொற்களை மேலிருந்து கீழாக ஒழுங்குபடுத்தி எழுதுக.**

32. பாட்டன், தந்தை, பூட்டன், மகன்

.............................................

33. பகுதித்தலைவர், சிற்றூழியர், ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர்

.............................................

**பின்வரும் பாடலை பூர்த்தி செய்க.**

பச்சைக் கிளியே வா வா 34. ....................
உண்ண வா கொச்சி 35. ............. பூச வா
36. ............................ விளையாட வா

**சூத்தத்தை வலியுறுத்தும் மூன்று பழமொழிகளை குறிப்பிடுக.**

37. .............................................

38. .............................................

39. .............................................

**பின்வரும் நிகழ்வுக்கு பொருத்தமான விடையை தெரிக.**

40. வெள்ளைப் பிரம்போடு ஒருவர்.

i. பொலிஸாரிடம் அறிவிப்பேன்.
ii. உதவி புரிவேன்.
iii. தூர ஓடி விடுவேன்.

**44 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரம் 1 மணி 15 நிமிடம்
வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பின்வரும் பாடல்களை பூர்த்தி செய்க.**

1. ......................... காண்பதுவும் நன்றே 2. ................... நல்லார் 3. ................... கேட்பதுவும் நன்றே 4. நல்லார் ................. உரைப்பதுவும் 5. அவரோடு இணங்கி இருப்ப துவும் நன்றே

6. ..................... உடையார் அறிவிலர் என் றெண்ணிக் 7. .............. கருதவும் வேண்டா மடைத்தலையில் ஓடு 8. .................... ஓட 9. ............. மீன் வருமளவும் வாடி நிற்குமாம் 10. ......................

**பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.**

(நல்வழி, சோக்கிரடீஸ், டங்கன்வைட், சேர் ஐசக் நியூடன், மார்க்கோனி, தூரிகை, தோமஸ் அல்வா எடிசன்)

11. ஒலிம்பிக் போட்டி ஒன்றில் இலங்கைக்கு முதல் பதக்கத்தை பெற்றுக் கொடுத்தவர்............ ஆவார்.
12. ஔவையார் .................. யை பாடினார்
13. .................. புவியீர்ப்பை கண்டறிந்தார்
14. .................. சிந்தனையாளர்களில் ஒருவர்
15. ..................... சித்திரத்திற்கு நிறந்தீட்ட பயன்படும்

**பிழையான கூற்றை தெரிந்து கோடிடுக.**

16.
i. நற்குணங்கள் உடையவருக்கு செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப்போன்றது.
ii. மா, பலா, வாழை முக்கனிகளாகும்.
iii. பலூனை ஊதி குண்டூசியால் குத்த பலூன் வெடிக்காது.
iv. சிற்பி கண்ணைக் கவரும் சிற்பமாக மாற்றுவான்.

17.
i. மென்லோ பூங்கா மந்திரவாதி என அழைக் கப்பட்டவர் லியனா-டோ-டாவின்சி
ii. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் தோமஸ் அல்வா எடிசன்
iii. சுசந்திகா ஜெயசிங்க ஒலிம்பிக் போட்டி யில் ஒரு வெண்கலப் பதக்கம் பெற்றார்
iv. தேயிலைத்தோட்டம் நூல்கந்துர என்னும் இடத்திலேயே முதன் முதல் உருவாக்கப் பட்டது.

18. உலர்ந்த இலையை சூடாக்கி, தூளாக்கி பானம் தயாரிக்கப் பயன்படத்தக்க தாவரம்?
i. கோப்பி ii. தேயிலை
iii. கொத்தமல்லி iv. மிளகு

19. கொத்தன் வேலைகளின்போது பயன்படுத்து கின்ற உபகரணங்கள், மாத்திரம் அடங்கும் விடையை தெரிவு செய்க.
i. தணல் இடுக்கி, குறடு, அரிவாள்
ii. துருத்தி, குறடு, நீர்மட்டம்
iii. சுத்தியல், சாவனம், தட்டுப்பொல்
iv. இடுக்கி, துருத்தி, சுத்தியல்

20. இலங்கையில் காணப்படும் சப்ரகமுவ மாகா ணத்தின் தலைநகரம் யாது?
i. கொழும்பு ii. இரத்தினபுரி
iii. பதுளை iv. கொழும்பு

21. எம் மரக்கறியில் உள்ளிருக்கும் விதைகளை அகற்றி விட்டு சமைப்பதற்கு பயன்படுத்துவது எது?
i. கரட் ii. போஞ்சி
iii. புடோல் iv. கத்தரிக்காய்

22. இலங்கைக்கு மிக அண்மையில் அமைந்துள்ள நாடுகள் யாவை?
i. பூட்டான், மாலைதீவு
ii. சீனா, யப்பான்
iii. இந்தியா, ரஷ்யா
iv. அமெரிக்கா, நேபாளம்

23. வித்து முளைத்தலுக்கு அவசியமான காரணிகள் அமைந்துள்ள தொகுதி எது?
i. வளி, நீர், ஆற்றுமண்
ii. வளமான மண், வெப்பம், நீர், வளி
iii. வெப்பம், வளி, களிமண், நீர்
iv. வெப்பம், நீர், வளி, கிருமினாசினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. கடந்த காலங்களில் எமது நாட்டை ஆட்சி செய்த முதல் வெளிநாட்டவர்?

i. இலங்கையர் ii. ஆங்கிலேயர்
iii. ஒல்லாந்தர் iv. போர்த்துக்கேயர்


25. கிராமிய விளையாட்டுக்களை குறிக்கும் விளையாட்டுகள் எது?

i. முட்டியடித்தல், தாயம் போடுதல்
ii. தலையடி அடித்தல், கரப்பந்தாட்டம்
iii. போர்த் தேங்காய், குத்துச்சண்டை
iv. சில்லுக்கோடு, பல்லாங்குழி, கயிறு இழுத்தல்

**பிற்பகல் 1.15 இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு, பிற்பகல் 2.10 இற்கு குமார் நூலகத்தைச் சென்றடைந்தான்.**

26. வீட்டிலிருந்து நூலகத்திற்கு செல்வதற்குக் குமாருக்கு எடுத்த நேரம் யாது?

27. ஒரு பாத்திரம் ஒன்று கொள்ளும் பாலின் கனவளவு 5 லீற்றர் ஆகும். அப்பாத்திரத்தில் 2 லீற்றரும் 150 மில்லி லீற்றரும் பால் இருந்தது. இப்பாத்திரத்தை நிரப்புவதற்கு இன்னும் தேவைப்படும் பாலின் அளவு எவ்வளவு?

28. 
ஆ நூ ப ஒ
A B C D

எண் சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை சொற்களில் எழுதுக.

29. கோல் A யின் உள்ள எண்களின் மணிகளால் வகைக் குறிக்கப்படும் பெறுமானம் யாது?


**பின்வரும் பொருட்களின் பெயர் அவற்றைப் பயன்படுத்தும் தொழிலாளி என்பற்றை எழுதுக.**

30 


31 


32 

33 

34 

35 

36 

37 


38. 

39. 

40. 

41 

**பின்வரும் உபகரணங்களின் பயன்பாட்டை இனங்கண்டு அவற்றின் இலக்கத்தை அடைப்**




42. அருவி வெட்டப் பயன்படுத்தும் உபகரணம் ( )

43. தையல் வேலை செய்வோர் பயன்படுத்தும் உபகரணம் ( )

44. மழை வீழ்ச்சியை அளக்கும் உபகரணம் ( )

45. குளிர்பானப் போத்தலின் மூடியைத் திறப்பதற்கு பயன்பத்துவது ( )

46. காற்று வீசும் திசையை அறிய உதவுவது ( )

47. நீரைச் சூடாக்க உதவுவது ( )

48. பலகையொன்றில் அலங்கார வேலை செய்யப் பயன்படுவது ( )

49. தாள்களைப் பிணைக்கப் பயன்படுவது ( )

50. சுவர் ஒன்றை மட்டமாகக் கட்டப் பயன்படுவது ( )

51. தாள்களில் துளைகள் இடுவதற்குப் பயன்படுவது? ( )

52. சாம்பலில் பிசைத்து உலர்த்தி பாதுகாக்கும் வித்து எது?

i. பூசணி ii. பாகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. புடோல் iv. அவரை

53. நாட்டு மேடையில் நட்டு, பிடுங்கி பாத்திரங் களில் நட வேண்டிய தாவரம்?

i. மிளகாய் ii. பாகல்
iii. வல்லாரை iv. பூசணி

54. அலுமனியப் பாத்திரத்தில் சமைத்த உணவு களுடன் சேர்க்கக் கூடாத பொருள்?

i. நீர் ii. உப்பு
iii. அரிசி iv. வெண்ணெய்

55. அசுத்த நீரை பருகுவதால் ஏற்படும் நோய்?

i. வயிற்றோட்டம் ii. மலேரியா
iii. நெருப்புக் காய்ச்சல் iv. சிக்கன்குன்யா

56. வானவில்லில் காணப்படும் நிறங்கள்?

i. 8 ii. 6
iii. 7 iv. 5

57. எமது நாட்டின் தேசிய விளையாட்டில் ஓர் அணியில் பங்கு கொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை?

**விடைகள்**

1. நல்லாரைக்
2. நலமிக்க
3. சொல்
4. குணங்கள்
5. நன்றே
6. அடக்கம்
7. கடக்கக்
8. மீன்
9. உறு
10. கொக்கு
11. டங்கன்ட்வை
12. நல்வழி
13. சேர் ஐசக் நியூடன்
14. சோக்கிரடீஸ்
15. தூரிகை
16. iii
17.
18. ii
19. iv
20. ii
21. iii
22. i
23. ii
24. iv
25. i
26.
27.
28.
29.
30.
31. நீர்மட்டம் - கொத்தன்
32. அரிவாள் - கமக்காரன்
33. மட்டப்பலகை - கமக்காரன்
34. அரம் - தச்சன்
35. தட்டுப்பொல் - கொத்தன்
36. திருகாணி - தச்சன்
37. துளையிடுதல் - தச்சன்
38. மின்சோதிப்பான் மின் இணைப்பாளர்
39. மியாசு - கொத்தன்
40. தூக்கு குண்டு - கொத்தன்
41. வளைசில்லு - குயவன்
42.
43
44.
45.
46.
47.
48.
49.
50.
51.
52. i
53. i
54. ii
55. iii
56. iii
57. i

---

41 ஆம் பக்கத் தொடர்...

40. தம்பியை மின் தாக்குகிறது.

i. ஓடி ஒளிந்து கொள்வேன்.
ii. தந்தையை அழைத்து வர காரியாலயம் செல்வேன்.
iii. பிரதான ஆளியை அணைப்பேன்.

**விடைகள்**

1. 2
2. 1
3. 2
4. 2
5. 2
6. 2
7.
8. 3
9. 3
10.
11. 1
12. 2
13. 1
14. 2
15.
16.
17. 21:25
18. 09:15
19. 1
20. 2
21. 2
22. 2
23. 2
24. 4
25. 1
26. 3
27.
28.
29.
30.
31. 2, 4, 3, 5, 1
32. பூட்டன், பாட்டன், தந்தை, மகன்
33. அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர், ஆசிரியர், சிற்றூழியர்
34. பாலுஞ்சோறும்
35. மஞ்சள்
36 கொச்சி
37. சுத்தம் சுகம் தரும்
38. கூழானாலும் குளித்துக் குடி
39. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
40. 2
41 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 23

## தலைப்பு: மீன் தொட்டி - 02


### பரிசில் பெறும் சித்திரங்கள்



எஸ்.டி. சஹானியா
குளி/தோறகொடுவ மு.ஆ.பா.
கொன்னவ, அனுக்கன



எம்.எப்.எப். ஸபிய்யா
அல் அஸ்ஹர் ம.க.
தெஹியங்க, முருதலாவ




பாத்திமா மின்னா
க/மீரா மத்திய கல்லூரி
கடுகஸ்தொட்டை

### பாராட்டுக்குரிய சித்திரங்கள்



ஸாகிரா ஸமான்
குளி/ அல் ஹுமைரா ம.வி.
ஏதன்டவெல, வெவகம



எம்.ஜே.எப். அஸீரா
க/எனசல் கொல்ல ம.க.
தெல்தோட்டை



எஸ்.எப். ஹப்ஸா
பு/தில்லையடி மு.ம.வி.




எம்.எப்.எப். ரஹ்மா
கனமூலை




எம்.எப்.எப். ரிஸ்கா
பு/கனமூலை மு.ம.வி.



எம்.என். நிஸ்லா இஸ்ஸத்
அல் அஸ்ஹர் ம.க.
தெஹியங்க, முருதலாவ



ஸஹிர் ஸமூன்
குளி/ அல் ஹுமைரா ம.வி.
ஏதன்டவெல, வெவகம




எம்.எஸ்.எப். சப்னா
பு/கனமூலை மு.ம.வி.
கனமூலை



ஹம்தா சரீப்
மா/அஜ்மீர் தே.பா.
உக்குவளை



எம். அப்ரா சனூன்
ஜெபிலானி தே.பா.
...லங்கொடை



ஸல்மா மர்யம்
மே/களு/நளீம் ஹாஜியார் பெ.க.
பேருவளை



எம்.எச். ஆயிஷா
களு/ஜீலான் ம.க.
பாணந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Readers' Paradise**

தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

(வேறு கிளைகள் எதுவும் கிடையாது...)

www.ibh.lk

ஒரே கூரையின் கீழ்
தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...

ONLINE ORDERS & VPP ORDERS

- புனித அல்குர்ஆன் பிரதிகள்
- அகராதிகள்
- உளவியல் நூல்கள்
- தர்ஜுமாக்கள்
- கதைப்புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாமிய நூல்கள்
- அல் ஹதீஸ் தொகுப்புக்கள்
- வரலாற்று நூல்கள்
- இலக்கியத் தொகுப்புக்கள்
- இலக்கண நூல்கள்
- கவிதைத் தொகுப்புக்கள்
- பாடசாலை துணை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/DVD

You Ring 011 573 6098 We Bring

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்...

Seasonal Sales From
December 01st 2017 to 15th January 2018

Loyalty Card
Now Available



Accepted:

MasterCard VISA AMERICAN EXPRESS

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks என Type செய்து
40404 க்கு அனுப்புங்கள்.

IBH இன் இலவச விநியோகம்
தற்போது உங்கள் வீடுகளுக்கே.
(நகர எல்லைக்குள் மாத்திரம்)



தினமும் காலை 7:00 மணியிலிருந்து இரவு 9:00 மணி வரை உங்களுக்காக திறந்திருக்கும்

**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road | Maradana | Colombo - 09
Web: www.ibh.lk | Phone: 0115 729735

வெளியீடு மொத்த விற்பனை பகுதி : 0115 736098, 0772518641
தபால் மூலம் நூல்களைப் பெற : 011 2684851
புனித அல்குர் பிரதிகளை மொத்தமாக பெற : 0773171725

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org